www.tamilarangam.net

ஒக்ரோபர்- நவம்பர் 1989 2:7,8

# இலக்கு

அன்பளிப்பு:

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கு.2.7,8

ஒக்.நவம். 89

விலை.ரூபா 10

"பலவீனமான மக்கள் இனங்களை அடிமைப் படுத்தும் போக்கை அதிகரித்து வரும் நவீன ஏகாதிபத்தியம் தேசிய ஒடுக்குமுறையினை உக்கிரப்படுத்தி வரும் ஒரு புதிய காரணியாகும்.

....தேசிய ஒடுக்குமுறையை ஒழிப்பதென்பதை முதலாளித்துவ சமூக அமைப்பில் அடைவது சாத்தியமாக வேண்டுமானால், அது ஒரு முரணற்ற ஜனநாயகக் குடியரசு அமைப்பின் கீழ் மட்டுமே சாத்தியமாகும்."

- லெனின் -

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி. N.L.F.T

## அரசியல் பிரிவுகளின் முடிவான அடிப்படை வர்க்கப் பிரிவே.

"அரசியல் பிரிவுகளின் முடிவான அடிப்படை, வர்க்கப்பிரிவுதான் என்பது உண்மையே; இறுதியான பரிசீலனையில் நிச்சயமாக அதுதான் அரசியல் பிரிவுகளைத் தீர்மானிக்கிறது. ஆனால் இந்த இறுதியான அடிப்படை சரித்திர ரீதியான வளர்ச்சிப்போக்கில் பங்குபெறும் அதைப்படைப்பவர்களின் உணர்வு வளரும் போதுதான் வெளிப்படுகிறது. இந்த இறுதியான பரிசீலனையை அரசியல் போராட்டத்தினுல் மட்டுமே - சில சந்தர்ப்பங்களில் பல ஆண்டுகள் அல்லது பல பத்தாண்டுகளுக்கு நீடிக்கிற விடாப்பிடியான போராட்டமாக, சில சமயங்களில் அரசியல் நெருக்கடியாக வெடிக்கிற, மற்றசமயங்களில் பிசுபிசுத்து தற்காலிகமாக தேக்க நிலைக்கு வருகிற போராட்டத்தினுல் மட்டுமே செய்யமுடியும்."

(லெனின்-தொகுப்பு நூல் 7 - பக். 43.)

## தேசிய இன விடுதலையில் தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் பாத்திரம்.

(தமிழர் மகாசனசபை'யிலிருந்து' தமிழர் விடுதலைக்கூட்டணிவரை.)

தமிழ்மக்கள் தமது விடுதலையை வென்றெடுக்க வேண்டுமானால் தமது வரலாற்றை விஞ்ஞான வழியில் புரிந்து கொள்வது அவசியம். தமிழ்த்தரகு முதலாளியவர்க்கம் தன்னைப்பற்றியும், தமிழ்மக்களின் விடுதலையைப்பற்றியும் சொல்லியவற்றை தமிழ்ச்சமூகம் உண்மையென்று நம்பிக்கொண்டிருக்கிறது. தமிழ் காங்கிரஸிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணிவரை சுமார் 50 ஆண்டு கால ஸ்தாபன ரீதியான வரலாற்றை தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் கொண்டுள்ளது. இந்த நீண்ட காலப்பகுதியில் இவ்வர்க்கம் தமிழ்த்தேசியத்தின் விடுதலைக்கு என்ன பங்கை ஆற்றியுள்ளது என்பது இன்று வரைக்கும் சரிவரப் புரிந்து கொள்ளப்படாத நிலைமையே நீடிக்கிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக தனது வரலாற்றை முன்கொண்டு செல்ல இரத்தம் சிந்தி எடுத்த முயற்சி தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தால் காட்டிக்கொடுக்கப்பட்டு இந்திய விஸ்தரிப்புவாத அரசின் உதவியோடு ஒடுக்கப்பட்டதின்பின்னரும் அந்த நிலைமை நீடிப்பது அந்தத் தேசத்தின் துரதிஷ்டமே! இவ் அவல நிலைமைக்கு முற்றுப்புள்ளிவைக்காமல் தேசம் தன் விடுதலைப்பாதையில் முன்னேற முடியாது. இத் தவிர்க்கவியலாத் தேவை நாடி தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தைமீளாய்வுக்குட்படுத்துவது அவசியமாகிவிட்டது.

## 1. தரகு முதலாளிய வர்க்கமும், அதன் தேசிய விடுதலைப்புரட்சிக் கெதிரான செயல்பாடும்.

போர்த்துக்கேயர் (1505), ஒல்லாந்தரைத் (1638) தொடர்ந்து இலங்கை பிரித்தானியரின் ஆதிக்கத்துக்கு (1796) உட்பட்டது. இறுதியாக 1802ல் இலங்கை பிரித்தானியாவின் ஒரு 'காலனி நாடாக' ( COLONY ) பிரகடனம் செய்யப்பட்டது. இக்காலனித்துவ ஆட்சியாளர் தமது சுரண்டல் நலன்களில் இருந்து ஏற்படுத்திய பொருளாதார, அரசியல், சமூக மாற்றங்கள் புதிய சமூக வர்க்கங்களையும் தோற்றுவித்துள்ளன.

இக்காலனித்துவச் சுரண்டல் மேலைத்தேய நாடுகளின் முதலாளித்துவ உற்பத்திக்கு வழிதிறந்த அதே வேளையில் காலனி நாடுகளை 'முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறை' யிலேயே நிறுத்திருக்கச் செய்தது. காலனி நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட எத்தகைய பொருளாதார சீர்திருத்தங்களும் சுதந்திர முதலாளித்துவ வளர்ச்சிக்கு இட்டுச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. நவீன ஏகாதிபத்தியமானது காலனித்துவச் சுரண்டலையும், தேசிய ஒடுக்குமுறையையும் உக்கிரப்படுத்திய ஒரு புதிய காரணியாக உருவாகிற்று.

நமது நாட்டின் முதலாளித்துவத் தொழிற்துறை வளர்ச்சிக்கான மூலதனத்தையும், மூலவளத்தையும் ஏகாதிபத்தியம் அள்ளிச்சென்றது. மறுபுறம் ஏகாதிபத்திய உற்பத்திப் பொருட்களின் சந்தையாகவும் நமது நாடு மாற்றப்பட்டது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம்' ஆரம்பமாகியது. இதற்கு அவசியமான துறைமுகங்களை ,அண்டி வணிக நகரங்கள் தோற்றம் பெற்றன. துறைமுகங்களோடு இணையப்பெற்ற றெயில் பாதைகள், போக்குவரத்து சேவைகள் விரிவாகின. தொலைதொடர்புச்சாதன வசதிகள் வந்தன. இவை ஒருங்கே அமையப்பெற்ற வணிக நகரங்களை மையப்படுத்தி (கொழும்பு), ஏகாதிபத்திய பட்ட ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபட்ட வணிகத் தரகுமுதலாளிய வர்க்கம் தோன்றியது. ஏகாதிபத்தியச் சுரண்டல் ஏற்பாடுகளின் கருப்பையில் இருந்துபிறப்பெடுத்த இச்சமூக வர்க்கம் ஏகாதிபத்தியச் சுரண்டலின்பிரிக்க முடியாத அங்கமாகிவிடுகிறது. ஏகாதிபத்திய சுரண்டல்ஒழிக்கப்படுமானால் இவ்வர்க்கமும் ஒழிந்துதீர வேண்டும்என்பதால் இயல்பிலேயே இது ஏகாதிபத்தியச் சுரண்டலின் காவல்நாயாக விளங்குகிறது. ஏகாதிபத்திய அதிகாரத்தின் ஆதரவைக் கோரி நிற்கிற உள்நாட்டின்விதேசியத் தூணாக விளங்குகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொழும்பை மையப்படுத்திய இவ்விதேசிய, தமிழ் வணிகர் தரகு முதலாளிய வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்த கட்சிகளாகவே தமிழர் மகாஜனசபை (1921), அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் (1944), அகில இலங்கைத்தமிழரசுக் கட்சி (1949) என்பன உருவாகின. இவை வடக்கு கிழக்கு தமிழ்மக்களின் பிரதேச, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத்தேவைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்ட தேவைகளைப் பிரதிபலித்து நின்றவை ஆகும்.

தமிழ்மக்களைப் பொறுத்த வரையில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் இருந்து எழுந்த சாதிய, ஒடுக்கு நிலைகளைத் தகர்த்து வடக்கு கிழக்குச் சார்ந்த ஒருபொது பிரதேசத்தாலும், பொதுப்பொருளாதாரத்தாலும் ஒரு தேசமாக ஒன்றிணைக்கப்பட வேண்டிய தேவையின் முன்னே உள்ளனர். இது நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் தகர்வும் முதலாளித்துவ உற்பத்திமுறையின் தோற்றத்திலுமே சாத்தியமானதாகும். தமிழ் மக்களின் இத்தேவையை தமிழ் வணிகத்தரகு முதலாளியக் கட்சிகள் பிரதிபலிக்கவில்லை யென்பது மட்டுமல்ல, இதற்கு நேர் எதிராக சாதிய, ஒடுக்கு நிலைகளைப்பாதுகாத்த நிலவுடமை வர்க்கங்களுடன் கூட்டுச்சேரவும், ஏகாதிபத்தியச் சுரண்டலையும் ஏகாதிபத்திய அதிகாரத்தையும் பாதுகாத்து, அத்தகைய அதிகாரத்தில் தமக்கும் பங்கு கோருபவர்களாகவே இவர்கள் இருந்துள்ளனர். நவகாலனித்துவ நாடுகளின் சுதந்திர முதலாளித்துவ வளர்ச்சியை தடைசெய்ய நிலவுடமை வர்க்கங்களை பாதுகாக்கும் ஏகாதிபத்தியக் கொள்கையுடன் பொருந்திப் போகிற செயற்பாடாகும்.

பின் தங்கிய நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளையும், சமூகக்கட்டுக் கோப்புகளையும் சட்டரீதியில் பாதுகாத்துநின்ற 'யாழ்ப்பாண - தேசவழமைச்சட்டம்', 'மட்டக்களப்பு - முக்குவர் சட்டம்', போன்றவற்றையும், சாதிய அமைப்பையும் பாதுகாக்க தமிழ் வணிகத் தரகு முதலாளிய வர்க்கம் ஏகாதிபத்தியத்துடன் கூட்டாகச் செயற்படுகிறது.

'1928 இல் சேர் - பொன் இராமநாதன் 79கிராமச் சங்கப்பிரதிநிதிகளுடன் அன்றைய வெள்ளைக்காரத் தேசாதிபதியைக் கண்டு சாதி அமைப்பு முறையிலான பாடசாலை நடைமுறைகளை வலியுறுத்தினார். தேசவழமைச்சட்டத்தின்படி தமிழர்களின் பாரம்பரியம் காப்பாற்றப்படுவது அவசியம். என வாதம் புரிந்தார்........ டொனமூர் ஆணைக்குழுமுன் சாட்சியம் அளிக்கும் போதும் சாதி அமைப்பு முறைகளைப் பாதுகாத்து வாதிட்டார். தேசவழமையை வலியுறுத்தியும் படித்தவர்களுக்கு மட்டுமே சர்வசன வாக்குரிமைவழங்கப்படவேண்டும் எனவும் சாட்சியம் அளித்தார். 1945 இல் சோல்பரி ஆணைக்குழுவின் முன் 'தாழ்த்தப்பட்ட மக்கள்' சாட்சியமளிக்க வேண்டுமென்ற சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் (1943) கோரிக்கையை ஜி.ஜி. பொன்னம்பலம் எதிர்த்தார். 1967 -68 இல் சங்கானையில் 'தேனீர்க்கடைப்பிரவேச உரிமை' கோரிஒடுக்கப்பட்ட சமூகத்தினர் நடத்திய போராட்டத்தைப்பற்றி பாராளுமன்றத்தில் அமிர்தலிங்கம்; 'சங்கானையில் நடப்பது சாதிப்போராட்டமல்ல 'சங்காய்' போராட்டம் (வியட்நாம் போராட்டம்)' எனக்கூறி தனது சாதிய வக்கிரத்திற்கு சான்று தந்தார். 1968 இல் மாவட்டபுரம் கந்தசாமிகோவில் ஆலயப் பிரவேசத்தில் சி.சுந்தரலிங்கம் என்கிற 'அடங்காத் தமிழன்' சாதி வெறியர்களோடும், போலீஸ் குண்டர்களோடும் சேர்ந்து போராட்டத்தை அடக்கினார்.' (ஆதாரம்: சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - புதிய பூமி வெளியீடு -, யாழ்ப்பாணம் 1989)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வரலாற்று மெய் விபரங்கள் தமிழ் வர்த்தகதரகுமுதலாளிய வர்க்கத்திற்கும் நிலவுடமை வர்க்கங்களுக்கும் இடையான கூட்டையும், இவர்களது சனநாயக விரோத மிலேச்சத்தனத்தையும், தமிழ் மக்களின் தேசிய சமூக உருவாக்கத்தை தடைசெய்து ஏகாதிபத்தியச் சுரண்டல் நலன்களுக்கு சேவகம் செய்யும் தரகுமுதலாளிய வர்க்க இயல்பையும் வெட்ட வெளிச்சமாக்குகின்றன.

இதன் காரணமாகவே 1833 இல் கோல்புறூக் – கமரென் சீர்திருத்தப்படி இலங்கை என்கிற ஒரு நாட்டுக்குள் இருந்த இரு (சிங்கள – தமிழ்) பிரதேசங்கள் அத் தேச மக்களின் சுயவிருப்பத்திற்கு மாறாக ஏகாதிபத்திய ஒடுக்குமுறையாளர்களால் தமது சுரண்டல் நலன்களுக்காக பலவந்தமாக ஒன்றிணைக்கப்பட்டதற்கு – கட்டாய இணைப்பு – தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் எத்தகைய எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. இதற்கு மாறாக இக்கட்டாய இணைப்பின் மூலம் ஏற்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசமைப்பில், ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு துணைபுரிய தமக்கும் '<u>அதிகாரத்தில்பங்கு</u>' கோருபவர்களாகவே இவர்கள் இருந்துள்ளனர்.

ஒடுக்கப்படும் தமிழ்த் தேசத்தின் நலன்களுக்கு விரோதமாக ஏகாதிபத்திய அதிகாரத்தில் பங்கு கோரும் பிற்போக்கு வர்க்கமாக இவ் இருந்தமையே சிங்களத்தரகு முதலாளியவர்க்கத்துடன் ஐக்கியப்படுவதற்கான அடிப்படைக்காரணமாக இருந்துள்ளது. இந்த அடிப்படையின் மீதே 1919 இல் 'இலங்கை (வி)தேசிய காங்கிரஸ்' எனும் சிங்கள – தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களின் ஒரே ஸ்தாபனம் உருவாகியது. இப்படி ஒரு ஏகாதிபத்திய அடிவருடி விதேசியக்கும்பல் கோன்றியைத் தொடர்ந்தே 'உள்ளூர் விதேசிகளை' அதிகாரத்தில் அமர்த்திப் பயிற்றுவிக்கும் வேலையை ஏகாதிபத்தியம் ஆரம்பித்தது.

இலங்கையின் மீதான ஆட்சிப்பொறுப்பு முழுவதையும் ஏகாதிபத்தியம்தனது கையிலேயே வைத்துக்கொண்டு மகாதேசாதிபதி மூலம் ஆட்சி நடத்திவந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுகிறது. இதன்படி சட்ட நிரூபண சபை (1833), சட்ட நிர்வாகசபை என்ற ஆட்சியதிகார உறுப்புக்கள் அமுலுக்கு வருகின்றன. இவற்றில் உள்ளூர் விதேசிகளின் பிரதிநிதித்துவம் மற்றும் உரிமைகள், கடமைகள், அதிகாரங்கள் குறித்து ஏகாதிபத்தியம் படிப்படியாக மாற்றங்களைச் செய்து வந்துள்ளது. 1855,1910, 1920, 1924 ஆகிய ஆண்டுகளில் இத்தகைய சீர்திருத்தங்களும் 'உள்ளூர் விதேசிகள் அதிகளவில் பங்கேற்பதற்கான வாய்ப்புக்களும் உருவாக்கப்பட்டன.

இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் இலங்கையின் தரகுமுதலாளி வர்க்கப்பிரிவுகள் ஏகாதிபத்தியஅதிகாரத்தில் தமக்கு 'அதிக பங்கு' கிடைக்க வேண்டுமென்பதற்காகவே போட்டிபோட்டு வந்துள்ளன. 1920 இல் சட்ட நிரூபண சபை அங்கத்தவர் எண்ணிக்கை உயர்த்தப்பட்டபோது அதில் தரகு முதலாளிய வர்க்கத்திற்கு அதிக பங்கு கிடைக்க வேண்டுமென்றும், <u>கொழும்பில்</u> தனியான தேர்தல் தொகுதி வரையறுத்து ஒதுக்கப்பட வேண்டுமென்றும் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் கோரியது. இவ்வதிகாரப்பங்குக்கோரிக்கை சிங்களத்தரகு முதலாளிய வர்க்கத்தால் நிராகரிக்கப்பட்டதால் 'இலங்கை தேசிய காங்கிரஸ்' உடைந்து 'தமிழர் மகாசன சபை' (1921) தோன்றியது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மைதான். ஆனால் இவை நிச்சயமாக விடுதலையல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். '80களின் இந்த எதிர்ப்புகள் '70களின் எதிர்ப்புகளில் இருந்து அடிப்படைத் தன்மையில் மாறாதவை.. 'தன்னியல்பானவை' என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்த்தேசிய இனம் தனது விடுதலைக்காகப் போராடும் போது, நண்பர்களையும் சந்திக்கிறது; எதிரிகளையும் எதிர்கொள்கிறது. "நமது எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? புரட்சியின் இந்தப்பிரச்சனை முதல்முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று". தமிழ்த்தரகு முதலாளியவர்க்கம் தேசியப்புரட்சியின் நண்பனா? எதிரியா?. சமுதாய அளவில் இப்பிரச்சனை இன்னமும் தீர்க்கப்படவில்லை.

தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் அரசியல் செல்வாக்கிலிருந்து மீள்தல், தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்கு முன்நிபந்தனையாகும். எனவேதான் போராட்ட முன்னணியினரோ, மக்களோ தன்னியல்பான எதிர்ப்புகளின் அன்றி தமிழ்த்தரகுமுதலாளியத்தின் எதிர்ப்புரட்சிப்பாத்திரத்தை விஞ்ஞான வழியில் புரிந்துகொள்வதின் மூலம் இயக்கம் தனது பலத்தை கட்டியமைக்க வேண்டும். அப்போதுதான் மக்களைத் தேசிய புரட்சியில் ஊன்றி நிற்கச் செய்வது சாத்தியமாகும்.

## 4. தேசிய விடுதலை எழுச்சியும் தமிழ்த்தரகுமுதலாளியத்தின் காட்டிக்கொடுப்பும். (1977 - 1987)

1977ல் சிங்கள வர்த்தகத்துறைத்தரகு முதலாளியக் கட்சியான ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஏற்கனவே வளர்ந்திருந்த பொருளாதார அரசியல் சமூக முரண்பாடுகள் மேலும் கூர்மையடைந்தன. தமிழ் மக்கள் தனித் தமிழ்ழ அரசை வேண்டி நின்றனர். ஜே.ஆர் 1915ல், முஸ்லீம் வர்த்தகதரகுமுதலாளிகளை அடித்துப்பணிய வைத்த வழிமுறையில், மக்களின் விடுதலை உணர்வையும் அடித்துப்பணிய வைக்க நினைத்தார்! "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என யுத்த பேரிகை முழங்கியது... அவ்வழியில் ஒரு இன அழித்தொழிப்புக் கலவரத்தின் இரத்தக்கறையோடு ஆட்சியை ஆரம்பித்தார். ஜே.ஆர். "தமிழினத்தலைவன்" அமிர்தலிங்கம் தமிழ்மக்களின் எதிர்ப்புக்களைக் காலில் போட்டு மிதித்து 'எதிர்கட்சித் தலைவர்' பதவியை ஏற்றுக்கொண்டார். ("தமிழீழத்துக்காக சர்வதேசமெங்கும் பிரச்சாரம் செய்ய ஒரு அரிய சந்தர்ப்பம்!", "ஒரு தமிழன் எதிர்க்கட்சித்தலைவராக இருப்பது எத்தனைப்பெருமை...!" என்றெல்லாம் இது விளக்கப்பட்டது.)

மக்கள் 'தமிழீழம் எங்கே' என்று கேட்டார்கள். "அந்நியநாட்டில் அரசாங்கம்" வைகுந்தவாசனின் மசாசூட்ஸ் தமிழீழம்! — அமைக்கப்போவதாகப்புரட்டினர். இப்படிச் சேடம் இழுக்கத்தொடங்கிய 'தமிழ்த்தரகுமுதலாளியத்தின் "தமிழீழத்தாகம்" .சீக்கிரமே மூச்சு நின்று போய்விட்டது. சிங்களத் தொழிற்துறைத்தரகர்களின் 1972 அரசியல்யாப்பு எதிர்க்கப்பட்டது. செல்வா பதவி துறந்தார். சிங்கள வர்த்தகத் தரகர்களின் 1978 பாசிஸ அரசியல் யாப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அமிர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்படுகின்றது (1978). பயங்கரவாதத்தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டு (1979) தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்படுகின்றனர். [illegible] சுதந்திர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்த்தக வலயம் என ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு நாட்டை அம்மணமாக நிறுத்தியது. நெருக்கடியை மேலும் ஆழப்படுத்தியது. ஒடுக்குமுறையும் கூர்மையடைந்தது. தமிழ்த்தேசிய விடுதலை எழுச்சி தீவிரமடைந்தது.

தமிழ்த்தரகு முதலாளியம், தன் வர்க்கச்சுரண்டல் நலனுக்கு கிடைத்த வாய்ப்பாக எதிர்க்கட்சித்தலைவர் பதவியைப் பயன்படுத்திக் கொண்டு உள்ளது. எந்த ஒரு போராட்டத்திலும் இறங்கவில்லை. எல்லா ஒடுக்குமுறைகளுக்கும் துணைபோகிறது. வர்க்க நலனின் முன்னால் 'இனநலன்' அர்த்தமற்ற செல்லாக்காசாகி விட்டது.

இறுதியாக அரைக்காலனிய அமைப்புமுறைக்கு அச்சுறுத்தலாக விளங்கிய தேசியவிடுதலை எழுச்சிக்கு வடிகால் அமைக்க சிங்களத்தரகு முதலாளியத்துடன் கூட்டுச்சேர்ந்து ' 'மாவட்ட அபிவிருத்தி சபைத்திட்டத்தை முன்வைக்கின்றனர். இதிலேயும் குறைந்தபட்சம் ஒரு சுயாட்சிக்கான சுவடு கூடக் கிடையாது. போராளிக் குழுக்களும், மக்களும் தீவிர எதிர்ப்பின் மத்தியில் தமிழ்த்தரகுமுதலாளியம் மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலில் பங்கேற்கிறது. இச்சமரச முயற்சி படுதோல்வியைத் தழுவியது.

தமிழ்த்தரகு முதலாளியத்தின் கையை மிஞ்சி வளர்ந்து சென்ற தேசியவிடுதலைப் போராட்டத்துக்கு '83ஜூலை இன அழித்தொழிப்பு பெரும் உந்து விசையை அளித்தது. தேசம் தழுவிய பேரெழுச்சியாக விடுதலைப்போராட்டம் வெடித்தது. எல்லோரும் ஆயுதங்களைத்தேடினர். "வீட்டுக்கு ஒருவன்" அல்ல பலர் வீதிக்கு வந்தனர். "பழம் பழுத்தது"!

இப்பேரெழுச்சியை ஒடுக்க சிங்களத்தரகுமுதலாளிய பேரினவாத பாசிஸ அரசு (ஈழக்கோரிக்கையைத் தடைசெய்யும்) 6வது திருத்தச்சட்டத்தை இயற்றியது தமிழ்த்தரகு முதலாளியத்தை நெருக்கடிக்குள் தள்ளியது. 6வது திருத்தத்தை (பகிரங்கமாக) ஏற்றுக் கொண்டால் தமிழ்மக்களிடமிருந்து முற்றாகத் தனிமைப்பட வேண்டும். தனது பின்புலத்தை இழந்து போனால் சிங்களத்தரகுமுதலாளியத்துடன் பேரம் பேசுவதற்கான பலத்தை இழந்துவிட நேரிடும். அந்தக்கதியேற்பட்டால் சிங்களத்தரகுமுதலாளியம் போடுகிற பிச்சையை பெற்றுக்கொள்ளவேண்டியதுதான். அதற்குமேல் அதிகம் கோர பலமிருக்காது. திருத்தத்தை ஏற்க மறுத்தால் "பாராளுமன்றப் பஞ்சுமெத்தை" பறிபோய்விடும். பாராளுமன்றத்தை விட்டுவிட்டு மக்களிடம் போனால் அவர்கள் 'விடுதலையுணர்வோடு' இருக்கிறார்கள். போகாதிருப்பதற்கு ஆயுதங்கள் வேறு. இரு "தம்பிமாருக்கு", "தலைவர்கள்"பணிந்து போகவேண்டிய கேவலமாகும்; பிறவர்க்கங்களுக்கு சேவகம் செய்கிற கொடுமையாகும். இந்தநேரத்தில் தான் வானந்தரத்தில் ஒரு அசரீரி ஒலிக்கிறது/. "தமிழர்கள் அட[redacted]க்கப்படுவதை பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்". தமிழ்த்தரகுமுதலாளியம் பாக்குநீரியைத்தாண்டுகிறது.

இந்திய அரசின் தலையீட்டோடு இலங்கை அரசைப்பணிய வைத்ததன் மூலம் தமது வர்க்கத்தரகுமுதலாளிய நலன்களை அடையமுயல்வது இதற்குத்தடையாக இருக்கக்கூடிய விடுதலைப் போராட்டத்தையும், போராளிகளையும் இந்திய அர்சைக் கொண்டே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது, இதற்காக இந்திய விஸ்தரிப்புவாத அரசுக்கு சேவகம் செய்வது இதுதான் அவர்களின் திட்டம்.

——————— 0

*ஒப்புதல் வாக்குமூலம்; 'செல்வா ஈட்டிய செல்வம்', (இந்திய-இலங்கை ஒப்பந்த வரலாறு), அ.அமிர்தலிங்கம், தமிழர் கூட்டணி வெளியீடு, சென்னை, 13.09.1987இல் இருந்து எடுக்கப்பட்டவை (பக்-29)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தச் சதித்திட்டத்தை சாத்தியமாக்க தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் நான்கு ஆண்டுகள் (83 - 87)' பாடுபட்டுள்ளது! முதல்கட்டத்தில் தமிழ் மக்களின் பாதுகாவலராக இந்திய அரசு ஆடிய கபட நாடகத்துக்கு அங்கீகாரம் பெறவும், இலங்கை அரசைத் தனிமைப்படுத்தவுமான சர்வதேசப் பிரச்சாரத்தில் இந்திய விஸ்தரிப்புவாத அரசுக்கு சேவகம் செய்கிறார். அமிர்தலிங்கத்தின் ஒப்புதல் வாக்குமூலம்*(1)

"..இப்படியே உலகநாடுகளுக்கெல்லாம் எம்நிலையை விளக்க நாம் எடுத்த முயற்சி, மக்கள் துன்பப்பட ஓடிப்போகும் செயலா, அல்லது துன்பம் துடைக்க இந்திய உதவியை அதற்கு உலகின் ஆதரவை திரட்டும் முயற்சியா? என்பதை நம்மக்கள் நிச்சயமாக அறிந்தே இருக்கின்றனர்."

உலகின் ஆதரவை இந்தியாவுக்குத் திரட்டிக் கொடுப்பதன் மூலம் தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் துன்பம் துடைக்கும் முயற்சிதான்... நிச்சயமாக!

அதே நேரம் சமரசத்தீர்வுக்கான முயற்சியில் இறங்குகிறார். ஒரு இணைப்பு 'C' யிலிருந்து இந்திய இலங்கை ஒப்பந்தம் வரையான நீண்ட முயற்சியாகும். இந்த நீண்ட முயற்சிகளில் எங்கும் சுயநிர்ணய உரிமை பற்றியோ, குறைந்த பட்சம் ஒரு பூரண சுயாட்சிக்காகவோ தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் முயலவில்லை. அதன்றி அனைத்தும் மையஅரசின் அதிகாரத்தில் தமக்கு பங்கு வேண்டும் என்பதே. தமிழ்மக்களின் நண்பனாக நாடகமாடிய இந்திய அரசு போராளிக்குழுக்கள் திம்புவில் வைத்த கோரிக்கைகளை மறுக்கிறது. இந்த மறுப்பை ஏற்றுக்கொண்டு தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் ஒரு 'மாற்றுத்திட்டத்தை' முன்வைக்கிறது. இந்தத்திட்டம் வடக்கு கிழக்கு இணைப்பைக் கூட கோரவில்லை. இந்த்துரோகத்தை பூசி மெழுகிறார் அமிர்தலிங்கம், ஒப்புதல் வாக்குமூலம் (2)

"1985ம் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட மாற்றமான சூழ்நிலையில் - திம்புகோரிக்கைகளை இந்திய அரசு ஏற்க மறுத்து விட்டசூழ் நிலையில்:-
நாம் ஒரு மாற்றுத்திட்டம் முன்வைக்கா விட்டால் எமக்கு (தரகுமுதலாளியவர்க்கத்திற்கு) சார்பான ஒரே நாடான இந்தியாவின் ஆதரவை இழக்கும் அபாயம் ஏற்பட்டது. இதைத்தவிர்ப்பதற்காக இந்தியாவின் நட்பைப் பேணுவதற்காக ... நாம் ஒரு திட்டத்தை பாரதப்பிரதமரிடம் கையளித்தோம்."

திம்புக்கோரிக்கைகள் தமிழ்மக்களின் ஜீவாதார நலன்களை உள்ளடக்கியவை. இதை வலியுறுத்தினால் "இந்தியாவின் நட்பு" கெடுகிறது! இதற்காக, அதைக்கைவிட்டுவிட்டு "இந்தியாவின் நட்பு பேணப்படுகிறது" என்றால், அந்தநட்பு யாருடைய நலனைக்காப்பதற்காக?

பெங்களூர் பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சமரசமுயற்சியை நிராகரிக்கின்றனர். ஒப்புதல் வாக்குமூலம் (3)

"இதற்கு உடன் சம்மதத்தைப் பெறும் நோக்கத்தோடு இரவோடிரவாக தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத்தலைவர் திரு. பிரபாகரன் பெங்களூர் கொண்டு செல்லப்பட்டார். நீண்ட விவாதங்கள் நடைபெற்ற போதும் எவ்வித முடிவும் ஏற்படவில்லை."

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதற்குப்பின்னால் போராளிக்குழுக்களை ஓரங்கட்டி வைத்துவிட்டு தமிழ்தரகுமுதலாளிய வர்க்கம் இந்திய விஸ்தரிப்புவாத அரசின் சமரசத்திட்டத்துக்கு சதியாலோசனை வழங்கும் பாத்திரத்தினை ஆற்றுகிறது. ஒப்புதல் வாக்குமூலம் (4)

"இதனால் இத்திட்டம் (டிசம்பர் -19) உத்தியோகபூர்வமாக தமிழ் இயக்கங்களுக்கு அறிவிக்கப்படவோ அவர்கள் கருத்துக்கள் கோரப்படவோ இல்லை."

இறுதியாக இலங்கை அரசை இந்திய மேலாதிக்கத்தை ஏற்கப்பண்ண இந்திய அரசே நேரடியாக அச்சுறுத்தியது. 1) சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை ஒழித்துக்கட்டவும் 2) இலங்கைப்பாசிஸ அரசைப்பாதுகாக்கவும் 3) இந்திய மேலாதிக்கத்தை நிறுவவும் தமிழ்தரகுமுதலாளியத்தின் முழு ஒத்துழைப்போடு இந்திய -இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்புதல் வாக்கு மூலம் (5)

"எற்கெனவே நாலு வருடங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் மூலம் படிப்படியாக வளர்ந்து வந்த திட்டத்தில்... இருந்து உருவாகிப் பிறந்ததுதான் ஜூலை 29ந் திகதி கையெழுத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தமாகும்."

தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் (தேசத்துரோக இந்தியக் கைக்கூலிக்குழுக்களும்) மேலாதிக்க ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது. தனது எதிர்ப்புரட்சிப் பாத்திரம் காரணமாக மக்களில் இருந்து தனிமைப்பட்ட இக்கும்பல், மக்களின் விடுதலைப்போராட்ட உணர்வை வன்முறைகொண்டு நசுக்குவதன் மூலம் தமிழ்த்தேசிய இனத்தை இந்திய மேலாதிக்கத்தின் அடிமைகளாக்கி தனது தரகுமுதலாளிய வர்க்க நலனை அடைய இந்திய ஆக்கிரமிப்புப்படைகளுக்கு அழைப்பு விடுக்கின்றது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருந்த 'குறைபாடுகளுக்கு' தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் முன்வைத்த திருத்தம் இதுதான்! ஒப்புதல் வாக்கு மூலம்(6),

"வடக்கு,கிழக்கு மாகாண தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு நேரடி இந்தியத்தலையீடு அவசியம். சிங்களப் பொலிஸையோ, ராணுவத்தையோ இங்கு சட்டம் ஒழுங்கு நிலைநிறுத்தும் வேலையில் ஈடுபடுத்தக்கூடாது."

ஈழப்போராட்டத்தை ஒடுக்கி, தமிழ்தேசிய இனத்தை தேர்தல் பாதைக்குள் முடக்கிவிட்டு இலங்கை அரசை இந்திய மேலாதிக்கத்துக்குப் பணிய வைத்து தனது தரகுமுதலாளிய வர்க்க நலனுக்கு பக்கத்துணையாக இருக்க வேண்டுமென இந்திய விஸ்தரிப்புவாத அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. ஒப்புதல் வாக்கு மூலம் (7),

"இந்தியாவின் மேலான ஆதரவும் பாதுகாப்புத் எப்போதும் எமக்கிருக்கவேண்டும். அதுவே எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம். அதற்குப்பாத்திரமானவர்களாக (இந்தியக்கைக்கூலிகளாக!) நாம் நடந்துகொள்வோம்."

இவ்வாறு தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் தேசிய விடுதலைப்புரட்சியின் இலக்காக, தேசத்துரோக இந்தியக் கைக்கூலிக்கும்பலாக தமிழ்மக்கள் முன்னால் தன்னை முழுநிர்வாணமாக நிறுத்தியுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 5, தமிழ்த்தரகுமுதலாளியவர்க்கத்தின் யுத்ததந்திர, செயல்தந்திர, ஸ்தாபன கோட்பாடுகளின் எதிர்ப்புரட்சித்தன்மை.

உலக ஏகாதிபத்திய பொருளியல் அமைப்பை பாதுகாப்பது தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்திற்கு தவிர்க்க இயலாத அவசியமாகும். இதன்பொருட்டு உலக ஏகாதிபத்தியச் சுரண்டலின் பிரதான உறிஞ்சு குழலாக இருக்கும் இலங்கையின் அரைக்காலனிய அமைப்பு முறையை பாதுகாப்பது தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் கடமையாகிறது. இது இலங்கையில் முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்திமுறையையும், அதன் மேற்கட்டுமானங்களையும் பாதுகாப்பதுமாகும். இதுவே தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் குறிக்கோளாகும்.

இக்குறிக்கோளுக்கு சேவகம் செய்யும் வகையில் சமூக வளர்ச்சிப்போக்கின் திருப்பங்களுக்கேற்ப தனது செயல்தந்திர வழியை தீர்மானித்துள்ளது. காலனியாதிக்கத்தாலத்தில் 'அதிகாரப்பங்கு' முயன்றது. அதிகாரக்கைமாற்றத்தின் பின் தமிழ்மக்களை தனது சமூக அடிப்படையாக மாற்றிக்கொள்ளும் அவசியம் எழுகிறது. இதனையும் தனது குறிக்கோளுக்கு இசைவான மூன்று எதிர்ப்புரட்சிக்கோட்பாடுகளின்(1)அமிதவாதம் 2)சமரசவாதம் 3)பாராளுமன்ற - சட்டவாதம்) அடிப்படையில் சாதிக்கிறது. 70களின் பின்னால் தேசியப்போராட்டம் முன்னுக்கு வருகிறபோது, அதனை திசைதிருப்ப தனிநாட்டுக்கோரிக்கையை தானே ஏற்றுக்கொள்வதாக நடிக்கிறது. 81இல் முன்வைக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திசபை இதன் உள்நோக்கத்தை அம்பலமாக்குகிறது. 1983 ஜூலை இன அழித்தொழிப்பைத் தொடர்ந்து தேசியவிடுதலைப்போராட்டம் பேரெழுச்சி அடைந்ததும் இந்தியத் தரகுப்பெருமுதலாளிய வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைக் குழிபறித்து சமரசத்தீர்வு ஒன்றின்மூலம் தனது அதிகாரப்பங்கை அடைய முயல்கிறது. இணைப்பு 'C' இலிருந்து, இந்திய - இலங்கை ஒப்பந்தம் 13வது திருத்தச்சட்டம் வரை இதற்கான முயற்சிகளால் நிறைந்துள்ளன. ஒப்பந்தத்திற்குப் பின்னால் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளின் துணையோடு சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை ஒடுக்கும் பாத்திரத்தை ஏற்கிறது. "சட்டவிரோதத் துப்பாக்கிகளிற்கு" எதிராக சட்டபூர்வதுப்பாக்கிகளை அணைத்துக்கொள்கிறது.

சூழ்நிலைமாற்றங்கள் திருப்பங்களை ஒட்டி செயல்தந்திர வழிகள் மாற்றப்பட்ட போதும் அடிப்படைமுழக்கம் '<u>அதிகாரப்பங்காகவே</u>' இருந்துள்ளது. சமஷ்டிக்கோரிக்கையும், 81இல் மாவட்ட அபிவிருத்திசபையும், 13வது திருத்தச்சட்டமும் இதனையே காட்டுகின்றன. இப்பொதுப்போக்கிலிருந்து விலகிநிற்பது தனிநாட்டுக்கோரிக்கை ஆகும். 77இற்கு பிந்திய முயற்சிகள் 'தமிழீழம்' அவர்களது ஏமாற்று மோசடி என்பதை நிரூபிக்கின்றன. இவை தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் தனது குறிக்கோளில் மிகவும் தெளிவாக இருந்துள்ளதைக் காட்டுகின்றன.

தன்முழு வரலாற்றுக்காலப் பகுதியிலும் தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் நிலவுடமை வர்க்கங்களுடன் நெருக்கமான கூட்டை வைத்திருந்துள்ளது. பொதுவாக சிங்களத்தரகு முதலாளிய வர்க்கங்களுடன் 'போராட்டத்தினூடு ஐக்கியப்பட்டுக்கொண்டு போதும்',

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிங்கள வர்த்தகதரகுமுதலாளிய வர்க்கத்துடனான அதன் ஐக்கியம் மிக நெருக்கமானதாகும். 70கள் வரை இந்திய தமிழ்மாநில தரகுமுதலாளிகளுடன் (பிரதானமாக திராவிட முன்னேற்றக்கழகம்) இருந்த கூட்டுக்கு மாறாக '83 இற்குப்பின்னால் மத்தியிலுள்ள இந்தியத் தரகுப்பெருமுதலாளிய வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து கொள்கிறது. சிங்கள தேசத்தின் பிற வர்க்கக்கட்சிகளுடனோ அல்லது தமிழ்த்தேசத்தின் குட்டிபூர்சுவா, தேசிய பூர்சுவா வர்க்கங்களுடனோ தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் கூட்டுக்குச் செல்வதில்லை. தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் தனது நண்பர்களையும் எதிரிகளையும் பற்றிய தெளிவான மதிப்பீட்டையும் ஐக்கிய முன்னணிக்கொள்கையையும் வைத்திருந்தது. (போராட்டசக்திகளுக்கு இது ஓர் கசப்பான உண்மையாக இருக்குமாக்கும்!)

போராட்ட வடிவங்களாக, அரும்வர்க்கத்தின் சட்ட ஒழுங்கு ஏற்பாடுகளுக்கு இடைஞ்சல் விளைவிக்காத, மக்களுக்குப் போர்க்குணத்தை ஊட்டுபண்ணாத, அரைக்காலனிய அமைப்புமுறைக்கு உட்பட்டு நிற்கிற மென்மையான வடிவங்கள் கையாளப்பட்டதை முன்னர் விரிவாகப் பார்த்தோம்.

ஸ்தாபன வடிவத்தைப் பார்ப்போம். நிலவுடமை வர்க்கங்கள், சொத்துடைய வர்க்கங்களின் நலன்களைப்பாதுகாக்கிற அப்புக்காத்துக்கள், உயர்சாதியினர், ஏகாதிபத்திய நவீன கல்விமுறையின் அசல்வாரிசுகளான கல்விமான்கள் இவர்களுக்குள் இருந்துதான் கட்சியின் மூலஸ்தானத்துக்கு செல்வம் பாக்கியம் பெற்ற நபர்கள் வருகிறார்கள். இதில் தேறுதவர்கள் 'நந்திபீடத்தோடு' நின்றுகொள்ள வேண்டும். அரசியல் நெருக்கடிகள், தேர்தல் காலத்தையொட்டி 'வசந்தமண்டபம்' திறக்கப்படும். மாநாடுகள்கூடும். இது மூலஸ்தானத்துத் 'தலைமைக்குழுவின்' தீர்மானங்களுக்கு சம்பிரதாய ஒப்புதல் பெறுவதை நோக்கமாகக் கொண்டு கூட்டப்படும். ஆதரவாளர்கள், அனுதாபிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வர். முடிவெடுக்கும் அதிகாரம் எப்போதும் தலைமைக்குழுவிடமே உள்ளது. அதாவது தலைமைக்குழுவுக்குப்புறம்பாக கட்சியின் கொள்கைகளை தீர்மானிப்பதில் ஆலோசனை வழங்கவோ, திருத்தங்கள் விமர்சனங்கள் செய்யவோ எந்த இடைநிலை ஸ்தாபன வடிவமும் இல்லை. கட்சிக்கிளைகள் என்று சொல்லப்படுபவை 'தேர்தல் திருவிழா'வுக்கு திறக்கப்படுகிற கடைகள் மட்டுமே. திருவிழா முடிந்தாம் கடை மூடப்பட்டு விடும். தமிழ் இளைஞர் பேரவை, தமிழ்மகளிர் பேரவை போன்ற விளம்பரப்பலகைகளுக்குப்பின்னால் தேர்தல் பணியாட்கள் கூடுவர். இவையும் தேர்தல் முடிவதோடு செயல் இழந்து போய்விடும். கட்சிக்கென்று சொந்தமாக பிரச்சாரப் பத்திரிகை இருந்ததில்லை (திரு. செல்வநாயகத்தின் சொந்தப்பத்திரிகையான 'சுதந்திரன்' கட்சிப் பத்திரிகையாக இருந்து வந்தது. பின்னர் அது மகனுக்குச் சொந்தமாகிவிட கட்சி ஆரம்பித்த 'உதய சூரியன்' பத்திரிகை சில இதழ்களோடு நின்று போய்விட்டது.) இவை மக்களின் "உரிமை"க்காகப் போராடுகிற ஒருகட்சியின் இலட்சணங்களாக இல்லையென்பதுமட்டுமல்ல ஒரு பிழைப்புவாதக்கட்சிக்குரிய இலட்சணங்களாகவும் கூட இல்லை. மேலும் அடிப்படையில் இது ஜனநாயக விரோத எதேச்சாதிகார தலைமை முறையுமாகும்.

புரட்சியின் விஞ்ஞானம் பற்றிய பாட்டாளிவர்க்கக் கண்ணோட்டத்தில் இருந்து விளக்கியதில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் யுத்ததந்திரம், செயல்தந்திரம், அடிப்படைமுழக்கம், போராட்டவடிவங்கள், ஸ்தாபனவடிவங்கள், ஊழியர் கொள்கை என்பன இவ்வாறுதான் இருந்து வந்துள்ளன. இவற்றின் சாரமாக இருப்பதும், தமிழ் சமுதாயத்தை பீடித்துள்ள நோய்களாக [illegible] என்ற எதிர்ப்புரட்சிக்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோட்பாடுகள் ஆகும். இவை தமிழ்ச்சமுதாயத்தின் சிந்தனையில் இன்றளவிலும் கூட மிக ஆழமான செல்வாக்குச் செலுத்துகின்றன. தமிழ்ச்சமுதாயத்தின் விடுதலைக்காகப்போராடுகிற வர்க்கங்கள் கூட இச்சிந்தனைப்போக்கில் இருந்து தம்மை கோட்பாட்டு ரீதியில் முறித்துக்கொள்ளவில்லை. தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்திடமிருந்து தமிழ்த்தேசிய இனம் மரபுரிமையாகப் பெற்றுக்கொண்டிருக்கும் இம்மூன்று கோட்பாடுகளுக்கு அவற்றின் எதிர்ப்புரட்சித் தன்மை காரணமாக புதைகுழி தோண்டும் காலம் வந்துவிட்டது. இல்லையென்றால் இவை விடுதலைப் புதைகுழி தோண்டிக் கொண்டே இருக்கும். எனவே இவற்றைத் தெளிவாக ஆராய்வோம்.

1) <u>இனவாதம்:</u>

தேசியம் என்றால் என்ன? தேசிய இனப்பிரச்சனை ஏன் தோன்றுகின்றது? என்பதை புரிந்துகொள்வதன் மூலமே இனவாதத்தின் வேரையும், அதன் தீங்கையும் எம்மால் புரிந்துகொள்ளமுடியும். தேசங்கள் ( NATIONS ) மனிதகுலத்தின் வரலாறு முழுமையிலும் இருந்துவந்தவையல்ல. அதுபோல் என்றென்றைக்குமாக நிலைத்து இருக்கப்போறவையும் அல்ல. வரலாற்று வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தான் தேசங்கள் தோன்றின. உலக சமூகத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சிப்போக்குக்கேற்ப தேசங்களின் தோற்றமும் முந்தி அல்லது பிந்தி நடந்துள்ளன. ஸ்டாலின் "தேசம் என்பது முதலாளித்துவ <u>உதயகால கட்டத்தைச்</u> சேர்ந்த வரலாற்று ரீதியான வகையினம்" என்பார். (அழுத்தம் நமது). இங்கே தேசம் என்பது முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சியோடு இணைத்துக்காணப்படுகிறது.

மனிதர்களை ஒரு சமுதாயமாக இணைப்பது உற்பத்தி முறையாகும் எனவே வரலாற்று வளர்ச்சியில் நிலவிவந்த வெவ்வேறு வகையான உற்பத்தி முறைகளுக்கேற்ப மனிதர்கள் சமுதாய மயமாகும் பாங்கும், அச்சமுதாயத்தின் வரப்பும், பண்புகளும் தீர்மானிக்கப்பட்டு வந்துள்ளன.

நிலப்புரபுத்துவ உற்பத்திமுறை 'கிராம சமுதாயங்களாக' மக்களை ஒன்றிரட்டியது. இது நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையின் தன்னிறைவுப் பொருளாதாரத்திலிருந்து (பற்றாக்குறையில் தன்னிறைவு) தோன்றிய சமுதாய அலகாகும். சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிலேயே - அல்லது அதற்கு குறைவாகவே - உற்பத்தி இருக்கிறபோது சமுதாயத்தின் பரப்பளவும் குறுகியதாகவே இருக்கிறது. உற்பத்தியின் பின்தங்கிய தன்மைக்கொப்ப அந்த சமுதாயத்தின் சிந்தனையும் குறுகியதாக இருக்கும். 'இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன?' என்பது இக்கிராம சமுதாய உணர்வின் வெளிப்பாடாகும். இந்நிலவுடமைக்காலத்தைய சுயதேவை உற்பத்தி முறைக்கான வேலைப்பிரிவினை வடிவமாகவே 'சாதி' தோன்றியது. பின்னர் சாதியை அடிப்படையாகக் கொண்ட சமுதாயப்பிரிவுகளும் தோன்றின. இந்தளவிலான அல்லது இன்னும் வளர்ந்ததான 'மக்கட் சமுதாயப் பிரிவுகள்' எல்லாம்அடிப்படையில் முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்திமுறையைச் சார்ந்த வகையினங்கள் ஆகும். இவையல்ல தேசங்கள். ஸ்டாலின் "தேசம் என்பது இன அடிப்படையிலோ அல்லது குல அடிப்படையிலோ அமைந்ததல்ல" என்கிறார். இவ்வாறு தன் சமுதாயப்பரப்பை விரிவாக்கி மென்மேலும் ஒன்று திரளும் போக்கு அதிகரிப்பது ஏனெனில் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையினுள்ளேயே - மனித அறிவு, தொழில்நுட்பம், உற்பத்தி கருவிகள் போன்ற - உற்பத்திச்சக்திகள் இடையறாது வளர்ந்து வருவதலாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு பழைய சமுதாயமும் புதிய சமுதாயத்தினை தன்னுள்ளேயே கருக்கரித்துக்கொள்கிறது. நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையே பூர்சுவா உற்பத்தி சக்திகளை உருவாக்கிக் கொள்கிறது. "ஒரு புதிய சமுதாயத்தைக் கருத்தரித்துள்ள ஒவ்வொரு பழைய சமுதாயத்துக்கும் வன்முறையே மருத்துவச்சி. எனவே ஒரு பொருளாதாரச் சக்தியுமாகும்" (மார்க்ஸ்). பூர்சுவா ஜனநாயக (வன்முறைப்)புரட்சிகள் நடந்தேறுகின்றன. (நவீன வரலாற்றில் இந்தப் புதிய கதாநாயகர்கள் வேறு யாருமல்ல, இன்று ஒடுக்கப்படும் மக்களுக்கு வன்முறையின் தீங்கைப்பற்றிப் போதனை செய்யும் ஏகாதிபத்திய முதலாளிய வர்க்கங்களின் மூதாதையர்களே!) நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையின் சிதைவில் 'கிராம சமுதாயம்' சிதைக்கின்றது. தற்போது ஆளும் வர்க்கமாய் உயர்ந்துவிட்ட பூர்சுவா வர்க்கம் "சமுதாயத்தின் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட சக்தியான அரசின் அதிகாரத்தை" பயன்படுத்தி முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சிக்கு வழிதிறந்துவிடுகின்றது.

முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையானது தனது வளர்ச்சிக்கும் வீச்சுக்கும் ஏற்ப மக்களை மென்மேலும் சமுதாயமயப்படுத்துவதில் தனது பாத்திரத்தை ஆற்றுகிறது. பழைய உற்பத்தி முறையின் குறுகிய சமுதாயவட்டம் தகர்க்கப்பட்டு பொதுமொழி, பண்பாடு, பிரதேசம், உணர்வு என்பவற்றால் ஒன்றிணைகிற தேசிய சமூகங்களை - தேசங்களை - தோற்றுவிக்கிறது. இவ்வாறு "முதலாளித்துவ உதயகாலகட்டத்தைச் சேர்ந்த வரலாற்று வகையினமாக" (ஐரோப்பிய) தேசங்கள் உருவாகின.

நமது நிலைமைவேறு. நமதுநாட்டில் முதலாளித்துவம் உதயமாகவில்லை. ஏகாதிபத்தியம் அதனை அஸ்தமிக்கச்செய்துவிட்டது. நிலப்பிரபுத்துவத்தில் சிதைவு நடந்துள்ளது. ஆனால் முதலாளித்துவ வளர்ச்சி ஏற்படவில்லை. (ஜனநாயகப் புரட்சி நடந்தேறவில்லை)
நிலையில் சிற்றுடைமைப்பொருளாதாரமே தக்கவைக்கப்படுகிறது. இவ்வாறு இலங்கையில்
ஏகாதிபத்தியச் சுரண்டல் காரணமாக இவ்விடை/_ சமூக பொருளாதார அமைப்பு
<u>அரைக்காலனிய</u> <u>அரைநிலப்பிரபுத்துவமாக</u> இருக்கிறது. ஆனால் ஏகாதிபத்திய உற்பத்திப் பொருட்களினதும், ஏகாதிபத்திய நிதிமூலதனத்துடன் கூட்டுச்சேர்ந்துள்ள தரகுமுதலாளிய உற்பத்திகளினதும் பண்ட வாணிகம் வளர்ந்துள்ளது. ஏகாதிபத்திய சுரண்டல் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட ரெயில்வே பாதைகள், பிறபோக்குவரத்து வசதிகள் உள்ளன. தொலை தொடர்புச்சாதனங்கள் வளர்ந்துள்ளன. துறைமுகங்களை அண்டிய வணிக நகரங்கள் தோன்றியுள்ளன. இவையெல்லாமும் சேர்ந்து பழைய சமூகக்கட்டுக்கோப்புக்களை தகர்த்துள்ளன. இந்தளவில் அரைக்காலனிய அரைநிலபிரபுத்துவ அமைப்புக்குள்ளேயே தேசிய உருவாக்கம் நடந்துள்ளது. ஆனால் இந்த வளர்ச்சிப்போக்கு பூர்த்தியாகவில்லை. இந்த அமைப்பு முறைக்குள் பூர்த்தியாகவும் முடியாது. மேற்கண்ட அதனது வளர்ச்சிக்கு தேசிய அரசு - அரசியல் அதிகாரம் - முன்நிபந்தனையாக உள்ளது. இவ்வரசதிகாரத்தைக் கொண்டு சுதந்திர முதலாளித்துவப் பொருளுற்பத்தி வளர்ச்சிக்கு வழியமைப்பதன் மூலமே சுதந்திர மானதும் பூரணமானதுமான தேசங்கள் தோன்றமுடியும். இதனால் ஏகாதிபத்தியத்தின் காவல்நாயான இலங்கையின் அரைக்காலனிய அரசும், தமிழர்தேசமும் ஒன்றைக்கொன்று பகைமையான முரண்பாடு கொண்டவையாகும். இனிமேல் ஒரு சுதந்திர தேசத்தைப் பிரசவிக்க வன்முறையே மருத்துவச்சி.

இலங்கையின் தரகுமுதலாளிய ஆதிக்கம்பல்களாலும், அவர்களின் சகபாடியான தமிழ் தரகுமுதலாளிய வர்க்கத்தாலும் இதனைத் தாமதப்படுத்தத்தான் முடிந்தது. தடுத்துவிடமுடியவில்லை. '70களின் பின்னால் ஒரு தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டமாக வெடிக்கிறது. ஏகாதிபத்தியமும் அதன் தரகுமுதலாளியவர்க்க அரைக்காலனிய அரசும் நிலவுடமை வர்க்க

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ங்களுடன் கூட்டுச் சேர்ந்து இவ்வளர்ச்சிப் போக்கை தடுத்து நிறுத்தி அரைக்காலனிய அமைப்பு முறையை கட்டிக்காக்க விடாப்பிடியாக முயல்கின்றனர். இவர்கள் சமுதாய வளர்ச்சியை தடுத்து நிறுத்த முயல்கிற பிற்போக்கு வர்க்கங்கள் ஆவர்.

முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியையும், சுதந்திர தேசங்களையும் வேண்டி நிற்கிற தேசிய முதலாளியவர்க்கம் (இடைப்பிரிவு), குட்டிபூர்சுவா வர்க்கம் (இடைப்பிரிவு) தொழிலாளவர்க்கம், விவசாயிகள் மேற்கண்ட பிற்போக்கு வர்க்கங்களை எதிர்த்துப்போரிடுகின்றனர். இவ்வர்க்கங்களுக்கிடையான போராட்டமாக நமது நாட்டில் 'தேசியப் போராட்டம்' நடக்கிறது.

இந்தத் திருப்புமுனையில் நிற்கிற ஒரு சமுதாயத்தில் ("ஈழத்தில்") 'பற்று' கொண்டுள்ள ஒருவர் உண்மையில் செய்ய வேண்டியது முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக உள்ள ஏகாதிபத்தியச்சுரண்டலையும், முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையையும் ஒழிப்பதற்காகப் போராடுவதுதான். அதுதான் தமிழ்மக்களின் பிரதேசத்தை பொருளாதார ரீதியில் ஒன்றிணைக்கவும், அப்பிரதேசத்தின் உற்பத்திசக்திகளை வளர்த்தெடுக்கவும், அதன் மூலம் சமுதாயத்தை முன்னேற்றவும் வரலாற்று வளர்ச்சியின் அடுத்த கட்டத்துக்குள் உந்தித்தள்ளவும் அவசியமானதாகும்.

தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கமோ நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் புதைகுழியை தோண்டி பழைய 'மனுமுகத்தின்' ஆன்மத்தை எடுத்து தமிழ்மக்களின் கண்களை மறைத்துவிட்டது. 'தமிழனை தலைநிமிர்ந்து நிற்கச் சொல்கிற போதும்' – ஏகாதிபத்தியங்களுக்கு குழைக்கும்பிடு போடுகிற இந்தத்தரகுமுதலாளியத்தமிழர்கள்! – 'அண்டபரம்பரை கதை' பேசுகிறபோதும், 'தமிழனுக்கு ஒரு நாடு' என்கிற போதும் நிலவுடமைச்சிந்தனையின் முடைநாற்றத்தைத்தான் காண்கிறோம். ஆனால் இது வரலாற்றுச்சக்கரத்தை பின்னோக்கி இழுக்கிற தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி இயல்பில் இருந்து வருவதைப் புரிந்து கொண்டாகவேண்டும்.

இந்தக் குறுமினவாதக் கோட்பாடு தமிழ்த்தேசிய (இன)ப்பிரச்சனையின் புரட்சிகர உள்ளடக்கத்தை காணவிடாததன் மூலம், போராட்டப்பாதையில் முன்னேறமுடியாமல் இழுத்துப்பிடிக்கிறது. மக்களுக்கு ஊட்டப்பட்ட இப்போலி இனப்பெருமையில் தமிழ்த்தரகு முதலாளியத்துக்கு (அரைக்காலனிய அரசுக்கு) கிடைத்த அடுத்த வெற்றி சிங்களப்பெருந் தேசிய இனத்தோடும் இன,மத சிறுபான்மையினரோடும் ஐக்கியப்படுவதற்கு விரோதமான மன உணர்வை தமிழ்மக்களிடையே உருவாக்கியதாகும்.

'மஞ்சள் ஏட்டுக்கு கழுத்தறுத்த சிங்களவன்', 'தொப்பி பிரட்டிச்சோனகன்', 'வயிற்றைக்குத்தினை நம்பினாலும் நம்பமுடியாத வடக்கத்தையன்',... இந்த வாய்மொழி கூற்றுக்கள் தமிழ்த்தரகுமுதலாளிய குறுமினவாதத்தின் சாதனை ஆகும். ஆனால் தமிழ்த் தேசிய (இன)த்துக்கு கிடைத்ததெல்லாம் தனது போராட்ட அணியைதானே பலவீனப் படுத்தி பொது எதிரிக்கு முன்னால் பலமிழந்து நின்றதுதான். தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் இதற்கான கைக்கூலியை பாராளுமன்றத்தில் நாகரீகமாகப்பெற்றுக்கொண்டது. இதற்கு மேல் தமிழ்மக்களிடத்தில் வலியுறுத்தப்பட்ட "இனப்பற்றை" "மொழிப்பற்றை", "தமிழ்க்கலாச்சாரத்தை" இவர்களிடத்தில் பூதக்கண்ணாடி வைத்துப்பார்த்தாலும் காண முடியாது. அத்தனையிலும் ஐரோப்பிய நெடி.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்கள் தமது வாழ்நிலையின் தேவையாக தேசியம் இருப்பதை உணர்ந்து கொள்ள முன்பே, பழைய உறவுகளின் பின்தங்கிய, தன்னியல்பான உணர்வூட்டல் கொள்கைவடிவம் கொடுத்தன் மூலம் அவர்களது வாழ்நிலையின் கடமைகளை புரிந்து கொள்ளவிடாது தடுத்து விட்டதே இவர்களது சாதனையாகும். ஆனால் தேசியம் சமூகாயத்தேவையாகி விட்டநிலையில் அதன் உயிர் ஏகாதிபத்திய எதிர்ப்பில் அடங்கியிருப்பதை உணர்த்தவும், இலங்கையின் ஆளும் கும்பல்களால் ஒடுக்கப்படும் பிற மக்கட் பிரிவினருடன் ஐக்கியப்படவும் இனவாத சிந்தனைப்போக்கை உடைத்தொழிப்பது இன்றியமையாததாகும். எனவே, தேசியத்திற்கும் இனவாதத்திற்குமிடையில் தெளிவான எல்லைக்கோட்டை வரைந்து கொள்வது அவசியம். அப்போதுதான் தேசியத்தை வளர்த்தெடுக்கவும், தேசியத்துக்குள் ஒழிந்து நிற்கும் இனவாதத்தை ஒழித்துக்கட்டவும் நம்மால் முடியும். மாறாக தேசியப்போராட்டத்தில் ஒதுங்கி நின்று "சோசலிஸம்" பேசுவதோ, இனவாதத்துடன் சமரசம் செய்து கொள்வதோ புரட்சிப்பாதையில் இருந்து தடம் புரள்வதேயாகும்.

2) <u>சமரசவாதம்</u>

இது ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு இவ் அரைக்காலனிய அமைப்பு முறைக்குள் தீர்வு கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையை அளிக்கிறது. பொருளாதாரத்துறையில் 'முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்திமுறையையும், அரசியலில் ஏகாதிபத்தியச்சுரண்டலுக்கான அரசியல் கொள்கைகளும் சட்டங்களும், அரசுமுறையில் பாராளுமன்றத்திரைக்குப் பின்னால் நிலவும் பாசிஸமும், சமூகபண்பாட்டுத்துறையில் ஏகாதிபத்திய அடிவருடிச் சிந்தனையும், நிலவுடமையின் எச்சசொச்சங்களும் ஒன்றுதிரண்ட இவ் அரைக்காலனிய அமைப்புமுறை ஏகாதிபத்திய, தரகுமுதலாளிய, நிலவுடமை வர்க்கங்களின் நலனைக் காப்பதற்கானதாகும். அடிப்படையில் இது தேசியத்துக்கும், ஜனநாயகத்துக்கும் விரோதமானதாகும்.

மக்களிடமிருந்து இவ் அமைப்பு முறையைப்பாதுகாப்பதற்காக ஆளும்கும்பல்கள் படை, நீதிமன்றம், சிறைச்சாலை போன்றவற்றைக் கொண்டுள்ளன. மக்கள் தமது அடிமை நிலைமையையும், ஜனநாயகம் மறுக்கப்பட்ட வாழ்வையும் உணர்ந்து கொள்ளாதவாறு தடுப்பதற்காக பாராளுமன்றம் உள்ளது. இந்நிலையில் இப்பாராளுமன்ற ஏமாற்றுக்களை அம்பலப்படுத்தி, இது பாசிசத்துக்கு முகத்திரையாக இருப்பதை மக்களுக்குப் புரியவைத்து, இவ் அமைப்பைப் பாதுகாக்கும் சட்டபூர்வ வன்முறை ஏற்பாடுகளை, மக்களின் ஆயுதந்தாங்கிய போராட்டத்தால் முறியடிப்பதன் மூலமே மக்கள் தமது நலன்களை அடையக்கூடிய அமைப்பை உருவாக்கலாம். எனவே ஆயுதப்போராட்டம் இன்றியமையாத்தேவையாகிறது.

தேசியத்துக்கும் ஜனநாயகத்துக்கும் விரோதமான இவ்வரைக்காலனிய அமைப்பு முறையை தூக்கியெறியும் தேசிய விடுதலைப்புரட்சியே நமது நாட்டின் இன்றைய உடனடித் தேவையாகும். இவ்வரைக்காலனிய அமைப்புமுறையால் ஒடுக்கப்படும் அனைத்து மக்கட் பிரிவுகளையும் தேசிய விடுதலைப்புரட்சியில் ஐக்கியப்படுவதற்கு, ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்திற்கு பாட்டாளிவர்க்கம் முன்வைக்கும் திட்டமே சுயநிர்ணய உரிமையாகும்.

நமது நாட்டில் ஏகாதிபத்திய, தரகுமுதலாளிய சுரண்டலை மூடிமறைக்கும் திரையாக 'சிங்களப் பேரினவாதமும் பௌத்தமதவாதமும்' பயன்பட்டு வந்தது. இதற்கு சிங்களப் பெருந்தேசிய இனம் பலியாகிப் போனமையால நிலைமை இருதேசிய இனங்களதும் ஐக்கியப்பட்ட புரட்சியை சாத்தியமற்றதாக்கியுள்ளது. இந்நிலையை ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை சிங்களப் பெருந்தேசிய இனம் - அதன்புரட்சிகர

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வர்க்கங்கள் – அங்கீகரிப்பதைப் பொறுத்தே மாற்றியமைக்க முடியும். (இதற்காக சிங்களப் பெருந்தேசிய இனத்தின் மத்தியில் சுயநிர்ணய உரிமைக்கான பிரச்சாரத்தைக் கொண்டு செல்வது ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் புரட்சியாளர்களின் கடமையாகும்.) அந்நிலைமை ஏற்படுகிற வரை 'தமிழ்த்தேசிய இனம் பிரிந்து சென்று தனியரசமைத்தல்' என்பது மார்க்சிய – லெனினிய வழியில் முற்றும் நியாயமுடையதாகும்.

இவற்றில் எந்தவழியில் தேசிய விடுதலைப்புரட்சி சாத்தியமாகும் என்பது வருங் காலத்துக்குரிய விடயமாகும். ஆனால் தேசிய விடுதலைப்புரட்சிதான் நமது நாடு இன்று எதிர்நோக்கியிருக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு என்பது வரலாற்றில் முடிவு செய்யப்பட்டு விட்ட விடயமாகும். இப்புரட்சியானது அரைக்காலனிய அமைப்புமுறைக்கு உட்பட்டதாக அன்றி அதனைத்தாக்கியெறிகிற வரலாற்றுக் கடமையை சாதிக்கும்.

புறவய யதார்த்த நிலைமைகளின் படி இதுவே தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்கான பாதையாக உள்ள போது இந்த அரைக்காலனிய அமைப்பு முறைக்குள்ளேயே தீர்வு கண்டுவிடலாம் எனக் கூறுவது இரண்டு நோக்கங்களில் இருந்து மட்டுமே வரமுடியும். ஒன்று, தமிழ்ச்சமூகத்தை அதன் விடுதலைப்பாதையில் இருந்து திசைதிருப்பி தம் சொந்த வர்க்க நலனை அடைவது. இரண்டு; அரைக்காலனிய அமைப்பு முறையைப் பாதுகாப்பது. தமிழ்த்தரகுமுதலாளியவர்க்கத்தின் சமரசவாத கோரிக்கைகளின் நோக்கம் இவையிரண்டுமே ஆகும். இது தமிழ்மக்களின் நலனுக்கு விரோதமானது. தமிழ்மக்களின் முழக்கம் "சுயநிர்ணய உரிமையை வழங்கு இல்லையேல் பிரிந்து சென்று தனிநாடமைக்கப் போராடுவோம்" என்பதாகும்.

3) <u>பாராளுமன்ற – சட்டவாதம்</u>:

இது பிரச்சனைக்குத்தீர்வு காணும் இடமாக பாராளுமன்றத்தைக்காட்டுகிறது. தேர்தல் பாதையை முன்மொழிகிறது. மக்களின் போராட்டங்களை சட்டவாத வரம்புகளுக்குள் கட்டிப் போடுகிறது. உண்மை இதுவா?

இந்தப்பாராளுமன்றம் பத்துலட்சம் மலையகத்தமிழரின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறித்தது. தனிச்சிங்களச்சட்டம் அரச நிர்வாகத்துறையில் இருந்து தமிழ் மக்களை விரட்டியடித்தது. தரப்படுத்தல் சட்டம் தமிழ்மாணவரின் கல்வி வாய்ப்புக்குக் குழிபறித்தது. சிங்களக் குடியேற்றச்சட்டம், பிரதேசத்தைப்பறித்தது. அரசியலமைப்புச் சட்டங்களும் திருத்தங்களும், அவசரகாலச்சட்டம், பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டம் பயங்கரவாதச்சட்டம் போன்ற [illegible] சட்டங்கள் போராடும் மக்களை கொன்று பழிதீர்த்தன. பொருளாதாரச்சட்டங்கள் நாட்டை ஏகாதிபத்தியங்கள் சூறையாட அனுமதித்தன. இந்திய [illegible] நாட்டை இந்தியாவுக்கு அடகுவைத்தது .. இத்தியாதி... இத்தியாதி....

இந்தப்பாராளுமன்றம் பிரச்சனைக்குத் தீர்வு காணும் இடமா? அல்லது இந்தப் பாராளுமன்றமே தீர்வுகாணப்படவேண்டிய பிரச்சனையா? உண்மையில் இது இரண்டாகவும் இருக்கிறது. ஏகாதிபத்தியத்துக்கும் தரகுமுதலாளிய வர்க்கத்துக்குமிடையே, சிங்களத்தரகு முதலாளிய வர்க்கத்திற்கும் தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்துக்குமிடையே சுருக்கச்சொன்னால் ஆளும் கும்பல்களிடையே எழும் பிரச்சனைகளுக்கு இது தீர்வுகாணும் இடமாகவும் உள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


"பரஸ்பரம் மனம்விட்டுப் பேசவும்" "கலந்துரையாடவும்" என அவர்களுக்கு வழிசெய்து கொடுக்கிறது. ஆனால் அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்கு இதுவே பிரச்சனையாக இருக்கிறது. உண்மையில், என்ன தீர்வு என்பதாகச் சொல்லப்படுகிறதோ அதுதான் பிரச்சனையாகவே இருக்கிறது.

இந்தப்பாராளுமன்றம், அரைக்காலனிய அமைப்புமுறையின் காவல்நாயான சிங்களத் தரகுமுதலாளியவர்க்கத்தின் அதிகாரத்திற்கான கருவியாக இருப்பதும், கட்டாய இணைப்பின் மூலம் தமிழ்தேசத்தின் மீதும் தனது அதிகாரத்தைச் செலுத்த முனைவதும் இப்பிரச்சனைக்கான அடிப்படைகளாகும்.

இந்த நிலைமைகளின் அடிப்படையில் தான் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையும் சிறுபான்மையும் உருவாகிறது. இந்தநிலைமைகள் ஜனநாயகத்திற்கு விரோதமானவை. இதன் அடிப்படையில் அமைகிற பெரும்பான்மை - சிறுபான்மை ஜனநாயகத்தோடு சம்பந்தமில்லாதவை. ஜனநாயகம் என்பது மக்களின் ஜீவாதார நலன்களைக் காத்துநிற்கிற அரசுமுறை பற்றியதாகும். எந்த நிலைமைகளின் கீழும் திரட்டப்பட்டு விடுகின்ற பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் தலைகளை எண்ணுவதற்குப் பெயர் ஜனநாயகம் அல்ல. அதை நமது நாட்டு தரகுமுதலாளியவர்க்கங்கள் எங்களிடம் படிப்பதற்கு விட்டுவிடுவோம். 'அவர்கள் தங்களுடைய வழியில் போராடுகிறார்கள். நாங்கள் எங்களுடைய வழியில் போராடுவோம்.'

இந்தப்பாராளுமன்றம் தனது ஜனநாயக யோக்கியதையை நிரூபிக்க வேண்டுமென்றால் கட்டாய இணைப்பைக்கைவிட்டு தமிழ்மக்களின் சுயவிருப்பத்தின்பேரில் சுயநிர்ணய உரிமையை வழங்குவதன்மூலம் ஐக்கியப்படுத்தட்டும். தமிழ்மக்களை ஒரு தனியான தேசிய (இன)மாக அங்கீகரித்து சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இரு தேசங்களையும் கூட்டாட்சி அமைப்பில் ஜனநாயகபூர்வமாக ஐக்கியப்படுத்தட்டும். இவர்கள் இதற்குத் தயாராக இல்லாதது மட்டுமல்ல, கட்டாய இணைப்பைக்கொண்டு பலவந்தமாக தமிழ்மக்களை ஒடுக்கியும் வருகிறார்கள்.

சனத்தொகை அடிப்படையில் 74%மாக இருக்கும் சிங்கள தேசத்தையும் 13%மாக இருக்கும் தமிழ்த்தேசத்தையும் பலவந்தமாகக் கட்டிவைத்து 'ஜனநாயகம்' பற்றிப்பேசுவது, தமிழ்மக்கள் ஒடுக்கப்படுவதற்கு ஆதரவாயிருப்பது மட்டுமல்ல கடைந்தெடுத்த அயோக்கியத்தனமுமாகும்.

ஏகாதிபத்தியங்களின் சட்டபூர்வ தரகனாகவும், தரகுமுதலாளிய வர்க்கங்களின் சட்டபூர்வ ஒடுக்குமுறையாளனாகவும், சட்டபூர்வ கொலைகாரனாகவும், சட்டபூர்வ சுரண்டலாளனாகவும் இருக்கும் இந்த பாராளுமன்றத்தை, ஒடுக்கப்படும் மக்களின் -சுதந்திரம் காக்கப்படுகிற - சட்டவிரோத வழிகளில்மட்டுமே தூக்கியெறியமுடியும்.

இதனால் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் விடுதலை, பாராளுமன்ற சட்டவாத வரம்புகளைத்தாண்டி, அரைக்காலனிய அமைப்புமுறையைத் தாக்கிவீழ்த்தி, தேசியப்புரட்சிகர வர்க்கங்கள் தமது கைகளில் அரசியல் அதிகாரத்தைப் பறித்தெடுத்துக்கொள்ள நீடித்த மக்கள்யுத்தப்பாதையில் நடத்தும் தேசிய விடுதலைப்புரட்சியின் மூலமே அடையப்படமுடியும்.

தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் பாராளுமன்ற-தேர்தல்பாதையையும், அகிம்சையையும் தெருக்கம்பத்தில் கட்டி சுட்டுப்போடுவோம். தமிழ்மக்களின் முழக்கம், "சிங்களத் தரகுமுதலாளியவர்க்க [illegible] அரசை தூக்கி எறிவோம்" என்பதாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 6. பதில்..... படுகொலையா?

தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் எதிர்ப்புரட்சிவர்க்கமாகும். அதன் தோற்றம் முதல் இன்றுவரை தமிழ்மக்களின் தேசிய விடுதலைப்புரட்சியை திசைதிருப்பி மழுங்கடிக்கும் எதிர்ப்புரட்சிப் பாத்திரத்தை ஆற்றிவருகிறது. தமது விடுதலையை வென்றெடுப்பதற்காக தமிழ்மக்கள் சிந்திய இரத்தத்தை, அவர்களின் அளப்பரிய தியாகத்தை, பல ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்களை, உடமை இழப்புக்களை இந்த எதிர்ப்புரட்சிக்கும்பல் தன் சொந்த வர்க்க நலனுக்காக வேட்டையாடியுள்ளது. சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தைக்காட்டிக் கொடுத்து, இந்திய ஆக்கிரமிப்புப்படைகளின் துணையோடு போராடும் மக்களை இரத்தப் பலிகொண்டுள்ளது. இதற்கு தமிழ்த்தேசிய இனம் ஒருநாள் பதில் சொல்லியே தீரும். எவ்வாறு?

கடந்த ஜூலைமாதம் கொழும்பில் வைத்து தமிழர் விடுதலைக்கூட்டணிச்செயலாளர் நாயகம் அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் உரிமைகோரிக் கொள்ளாத ஒரு குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த வழியில் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்திற்கு பதில் சொல்லிவிடலாம் என நாம் கருதவில்லை. ஏன்?

எந்தக்கட்சியையும் போலவே தமிழர்விடுதலைக் கூட்டணியும் ஒருவர்க்கத்தின் கட்சி. அது தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் - நலன்களுக்காகப் போராடிய - கட்சி. இந்த வர்க்கத்தின்அரசியல பிரதிநிதி என்றவகையில் தான் அமிர்தலிங்கம் தனது பாத்திரத்தை ஆற்றியுள்ளார். தனிமனிதனை அழிப்பதால் அவன் பிரதிநிதித்துவம் செய்யும் வர்க்கம் அழிந்து போய்விடுவதில்லை. (வெகு சாதாரண உண்மைதான் என்றாலும் சொல்லவேண்டியுள்ளது.... தானாகவே செத்துப்போனவர் செல்வநாயகம், ஆனால் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் செத்துப்போய்விடவில்லையே!). இவ்வாறு பௌதீகரீதியாக ஒருவர்க்கத்தை, அதன் அரசியற் பாத்திரத்தை, செயற்பாட்டை அழித்துவிடவும் முடியாது. உலக வரலாறு முழுவதிலும்இதற்கு ஒரு உதாரணத்தைத்தானும் காணமாட்டோம்.

சமூகம் வர்க்கங்களாகப் பிளவுண்டுள்ளது. இச்சமூகவர்க்கங்களின் முரண்பட்ட நலன்களில் இருந்தே பல்வேறு கருத்துப்போக்குகளும், ஸ்தாபன அமைப்புக்களும் தோன்றுகின்றன. இச்சமூகவர்க்கங்களுக்கும், சமூக நிறுவனங்களுக்கும் திட்டவட்டமான பொருளாயத அடிப்படையிருப்பதன் காரணமாகவே அவை விடாப்பிடியாகத் தமது இருப்புக்காகப் போராடுகின்றன. ஒருவர்க்கத்தின் முன்னணிப்பிரிவு, அவ்வர்க்கத்தின் நலன்களை உறுதிசெய்யும் அரசியற்குறிக்கோள்களையும், அவ்அரசியற் குறிக்கோள்களின் அடிப்படையில் கட்சியாகவும் ஸ்தாபனப்படுகிறது.

அரசியல் போராட்டங்களில் அரசதிகாரத்தைக் குறிக்கோளாகக் கொண்ட வர்க்க நலன்களே மோதிக்கொள்கின்றன. இம்மோதல்களில் தனிமனிதர்களின் இழப்புக்கள் ஒரு வர்க்கத்தின் இருப்பை இல்லாதொழித்து விடுவதில்லை. இதற்கு மாறாக அவ்வர்க்கம் உள்ளவரையில் தனது அரசியல் தலைவனை உடனடியாகவோ சற்றுக்காலந்தாழ்த்தியோ உருவாக்கிக் கொள்கிறது. எனவேதான் அமிர்தலிங்கத்தைக் கொலைசெய்வதனால் தமிழ்த்தரகு முதலாளியவர்க்கமோ, அதன் எதிர்ப்புரட்சி அரசியல் பாத்திரமோ இல்லாதொழிந்து விடாது என்கிறோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் எதிர்ப்புரட்சி வர்க்கமான தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் அரசியல் செல்வாக்கிலிருந்து தமிழ்மக்களை விடுவிக்க வழிகண்டாக வேண்டும். இதற்கு எந்த மாற்று வழியும் கிடையாது. நிச்சயமாகவும் முடிவாகவும் ஒரேயொருவழிமட்டுமே உண்டு. 'நாடுதழுவிய வகையில் அரசியல் அம்பலப்படுத்தலை திரட்டி ஒழுங்கமைப்பதே' அவ்வழியாகும். தீர்க்கமான தாக்குதலையும், தீர்மானகரமான வெற்றியையும் இவ்வழியில் மட்டுமே சாதிக்க முடியும்.

ஏனெனில் "ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் அரசியல் போராட்டமாகும்". ஆளும் வர்க்கங்கள் - அதன் இளைய கூட்டாளியான தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கமும் - தமது எதிர்ப்புரட்சி அரசியலை வைத்து மக்களைத் தம்பின் திரட்டுகின்றன. நாம், நமது அரசியலை வைத்து அவர்களை அம்பலப்படுத்துவதன் மூலம் மக்களுக்கு அரசியல் தெளிவை ஊட்ட வேண்டும். கூட இருந்து குழிபறிக்கும் சமரச வர்க்கங்களை தனிமைப்படுத்த வேண்டும். எதிரிகளை மக்களுக்கு இனங்காட்டி அவர்களை எதிர்த்துப்போராட மக்களைத்திரட்டி அமைப்பாக்க வேண்டும். இந்த '<u>அரசியல் போராட்டவழியில்</u>' செல்வதன் மூலமே நாம் வர்க்கப் போராட்டத்தில் முன்செல்லலாம்.

'இவ்வழியில் நம்பிக்கையோ, இதனைச்சாதிப்பதற்கான ஆற்றலோ பொறுமையோ இல்லாதவர்கள் தமது வெஞ்சினத்தை தீர்த்துக்கொள்ள பயங்கரவாதம் தவிர வேறு போக்கிடம் தேடுவது கஷ்டம்தான்'. இதனால் இவர்கள் அமிர்தலிங்கத்தைக்கொன்று விட்டார்கள். ஆனால் அமிர்தலிங்கத்தின் ஆவியை சந்திப்பார்கள். அது மக்களின் சிந்தனையில் அழுக்குப் பேயைப் போல் உட்கார்ந்திருக்கிறது!

புரட்சியை துப்பாக்கிகள் <u>தீர்மானிப்பதில்லை</u>. அரசியல் தான் தீர்மானிக்கிறது. (ஈழப்போராட்டத்தின் பின்னடைவு துப்பாக்கிகளின் பற்றாக்குறையால் ஏற்படவில்லை. பிரதானமாக அது ரசிய சமூக ஏகாதிபத்தியம், இந்தியவிஸ்தரிப்புவாத அரசு, தமிழ்த் தரகுமுதலாளியவர்க்கம் மற்றும் போராட்டநடைமுறை குறித்த தவறான அரசியல் மதிப்பீடுகளின் விளைவாக, போராட்டப்பாதையைத் தவறவிட்டதால்தான் ஏற்பட்டதென்பது கண்கூடான உண்மையல்லவா!). தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் மூன்று எதிர்ப்புரட்சிக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் தமிழ்மக்கள் மத்தியில் இன்னமும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது. இக்கோட்பாடுகளில் இருந்து தமிழ்மக்களை விடுவிக்காதவரையில் ஒருவர்க்கம் என்கிற முறையில் அதன் எதிர்ப்புரட்சிப்பாத்திரத்தை எந்தத்துப்பாக்கியும் எதுவும் செய்து விடாது.

எனவே தமிழ்த்தரகுமுதலாளிய மூன்று கோட்பாடுகளின் பழைய முழக்கங்கள் மண் மூடிப் போகட்டும். 'இந்திய - இலங்கைப்பாசிஸ அரசுகளை எதிர்த்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவோம்' என்ற புதிய முழக்கத்தோடு போராட்டப்பாதையில் முன்னேறுவோம்.0

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரப்பங்குப் போட்டி காரணமாக இவ் உடைவு ஏற்பட்டபோதும் தரகுமுதலாளிய வர்க்க ஐக்கியத்துக்கு உட்பட்ட போட்டியே இது என்பதைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஏகாதிபத்திய சுரண்டலையும், இலங்கையின் காலனிய அமைப்பு முறையையும் பேணிக்காப்பதில் இவ்வர்க்க ஐக்கியம் கூட்டுறவு கொள்கிறது. அவ்வாறு பேணிக்காப்பதற்கான தமக்குரிய பங்கைப் பெற்றுக்கொள்வதிலேயே போட்டியாகிறது. இது அவர்களது 'குடும்ப விவகாரம்'. இதில் மக்களின் நலன் எள்ளளவும் சம்பந்தம் கொள்ளவில்லை.

மாறாக இவ்வணிகத் தரகுமுதலாளிய வர்க்கங்களிடையே எழுந்தபோட்டி இந்நாட்டு மக்களுக்கு பெரும் சாபக்கேடை உருவாக்கிவிட்டுள்ளது. நம் நாட்டில் தலைவிரித்தாடுகிற 'சிங்களப் பேரினவாத - பௌத்தமதவாத கருத்தியலும்' மறுபுறம் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்துள் வளர்க்கப்பட்ட 'குறுமினவாதமும்' இதன் விளைவுகளே ஆகும்.

ஏகாதிபத்தியச் சுரண்டல் தோற்றுவித்தவணிகத்தரகுமுதலாளியப் பிரிவுகளாக முஸ்லீம்வணிகத்தரகு முதலாளியவர்க்கமும், இந்தியவம்சாவழி வணிகத்தரகு முதலாளிய வர்க்கமும், சிங்கள வணிகத்தரகு முதலாளியவர்க்கமும், தமிழ்வணிகத்தரகுமுதலாளியவர்க்கமும் தோன்றின. இவர்களுள் முன்னிலை வகித்தது முஸ்லிம் வணிகத்தரகு முதலாளியவர்க்கம் ஆகும். "1880இல் புறக்கோட்டை வர்த்தகத்தில் 86 செட்டியார் கம்பனிகளும் (இ.வ.வணிகத் தரகுமுதலாளிய), 66 முஸ்லீம்கம்பனிகளும் முதன்மைபெற்றன... விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்கள வியாபாரிகளே காணப்பட்டனர். 1890 இல் குஜராத்தைச் சேர்ந்த புதிய முஸ்லீம் வர்த்தக குழுவினர் - போரா, கோஜா, மேமன் போன்றோர் - ஏற்றுமதி இறக்குமதிவர்த்தகத்தில் இடம்பெற்றனர். இவர்களே புதிய வியாபார முக்கியஸ்தர்களாக மாறி பிரித்தானியரின் கூட்டுப்பங்குதாரர்களாகவும் அமைந்தனர்" (குமாரி ஜெயவர்த்தன 'இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள்' - குமரன் பதிப்பகம், சென்னை 1987, பக். 18). இதற்கு எதிராக சிங்கள - தமிழ் வணிகத்தரகு முதலாளிகள் கூட்டுச் சேர்ந்து தாக்குதல் தொடுக்கின்றனர். 1915 கலவரத்தின் மூலம் இந்த அசிங்க நிலை அடித்தளப் பலியவைக்கப்படுகிறது. 1946இல் அமைக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி இவர்களையும் உள்ளடக்கிக் கொண்டது. முஸ்லீம் வணிகத்தரகுமுதலாளியம் எந்தளவுக்கு வமத்து வீழ்த்தப் பட்டது என்பதைக்காட்டுகிறது. இதிலிருந்து சிங்களத்தரகு முதலாளிய வர்க்கத்தை அண்டி வாழவேண்டிய நிலைக்கு முஸ்லிம் வணிகத்தரகு முதலாளியம் ஆளானது. இதையே அவர்கள் 'தேசிய ஒற்றுமைக்கு' முயல்வதாக கூறி முஸ்லிம் மக்களை ஏமாற்றிவந்தனர். இக்கலவரத்தில் சிங்களத்தரகு முதலாளியவர்க்கத்துக்கு நியாயம் கோரி இலண்டன் சென்று திரும்பிய போதுதான் சேர். பொன். இராமநாதன் தேர்கட்டி இழுத்து மரியாதை செலுத்தப்பட்டார். இது முஸ்லிம் வணிகர்களை ஒடுக்குவதில் சிங்கள-தமிழ் வணிகர்களிடையே இருந்த ஐக்கியத்தையே காட்டுகின்றது. இதில் 'இனப்பெருமைக்கு' எதுவுமிருப்பதாக தெரியவில்லை... வரலாற்று மோசடியைத்தவிர!

இரண்டாவது மோதல் இந்திய வம்சாவழி வணிகத்தரகுமுதலாளிய வர்க்கத்துக்கும் சிங்களவணிகத்தரகுமுதலாளியவர்க்கத்துக்கும் இடையே தோன்றி வளர்ந்து 1930களில் கூர்மையடைகின்றது. ஒருபுள்ளிவிபரப்படி மொத்த வணிகத்தில் 90%உம், இடைவணிகத்தில் 60%உம், சில்லறை வியபாரத்தில் 40%உம் இந்தியவம்சாவழி வணிகத்தரகு முதலாளிகளின் கைகளில் இருந்ததாக அறியமுடிகிறது. (க. மோகன்ராஜ் - நவீன அடிமைத்தனம் ஈழ ஆய்வு நிறுவன வெளியீடு - சென்னை 1984, பக்.63, மேற்கோள்ளிப்பட்டது).

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வர்க்கப்போட்டி இந்தியர்களுக்கு எதிரான இனவாதப்பிரச்சாரமாக மாற்றப்படுகிறது. எனவே கொழும்புவாழ் இந்தியவம்சாவழித்தரகுமுதலாளியவர்க்கத்துக்கு மலையக மக்களை தன்பின் திரட்டுவதன் மூலம் தம்மைப்பலப்படுத்தி தமது வர்க்க நலனைக் காக்கக்கொள்ளும் தேவையை உருவாக்கியது. "நாம் இந்தியர்" என்ற உணர்வு மலையகத் தமிழருக்கு ஊட்டப்பட்டதற்கும், இந்தியத்தரகுப் பெருமுதலாளிய வர்க்கத்தின் அரசியல் பிரதிநிதிகளான காந்தி, நேருவின் ஆசீர்வாதத்தோடு 'இலங்கை இந்திய காங்கிரஸ்' (1939), தோன்றியதற்கும் இதுவே காரணமாகியது. இந்திய வம்சாவழி தரகுமுதலாளிய வர்க்கத்தின் அதிகாரபேரத்துக்கான பின்பலமாக மலையகத்தமிழர் அமைவதால் அவர்களின் அரசியல்பலத்தை தகர்ப்பது சிங்கள -தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களுக்கு அவசியமாகிறது. 'சேர் பொன்.அருணாசலம் "தோட்டக்கூலிகளுக்கு" வாக்குரிமை வழங்கக்கூடாது என வெளிப்படையாகவே வாதிட்டுவந்தார்'. இது இந்தியவம்சாவழி வர்த்தகதரகு முதலாளிகளின் வர்த்தக அதிகாரத்தைதகர்ப்பதில் சிங்கள - தமிழ் வர்த்தகதரகு முதலாளிகளிடையே இருந்த ஐக்கியத்தை - காட்டுகிறது. அதிகாரக் கைமாற்றத்தின் பின்னால் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் மூலம் இவ்வர்க்கப் போட்டிக்கு முடிவு கட்டப்படுகிறது.

இவ்விரு சந்தர்ப்பங்களிலும் வர்த்தகதரகு முதலாளிய வர்க்கங்களிடையேயான 'அதிகாரப்போட்டி' மூடிமறைக்கப்பட்டு தத்தம் இனநலன்கள் உயர்த்திப் பிடிக்கப்பட்டதாக காட்டப்பட்டது. இது தமது தரகுமுதலாளிய நலன்களை காத்துக் கொள்ள தத்தம் இனப் பிரிவை சமூக அடிப்படையாக மாற்றிக்கொள்ளும் தந்திரம் ஆகும். இவ்வாறு சிங்களமக்கள் 'சிங்கள பேரினவாத - பௌத்தமதவாத கருத்தியலில்' வளர்த்தெடுக்கப்பட்டனர். மலையகத்தமிழருக்கு 'நாம் இந்தியர்' என்கிற அந்நிய உணர்வு ஊட்டப்பட்டது. முஸ்லிம் மக்கள் குறுகிய மத உணர்வில் கட்டிப்போடப்பட்டனர். இதே வழிமுறையை தமிழ்த்தரகு முதலாளியமும் மேற்கொள்கிறது. இது பின்வரும் வரலாற்றுச் சம்பவங்களூடே நடந்தேறுகிறது.

1929 இல் டொனமூர் விசாரணைக்குழுவின் சர்வஜன வாக்குரிமையை ஏகாதிபத்தியம் வழங்கிய சலுகைபோல (!) இலங்கையருக்கு அளித்தது. உள்ளூர் விசுவாசிகளுக்கு அதிகளவு எண்ணிக்கையில் பயிற்சி அளிக்க விரும்பி - தனது எதிர்கால கால்நாய்களை உருவாக்கும் நோக்கில் - டொனமூர் அரசியல் யாப்பினதும் சர்வஜனவாக்குரிமையினதும் அடிப்படையில் இலங்கையின் முதலாவது பொதுத்தேர்தல் 1931 ஆண்டு நடைபெற்றது. இத்தேர்தலை பகிஷ்கரிக்கும்படி 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' கோரிக்கைவிட்டது. இத்தேர்தல் பகிஷ்கரிப்புக்கெதிராகக் கண்டனக்குரல் எழுப்பியவர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர். தேர்தல் பகிஷ்கரிப்பு இயக்கத்தின் தோல்விக்குப்பின்பு நடைபெற்ற இடைத்தேர்தலில் (1932)ஜி.ஜி வெற்றிபெற்றார். 1931 இல் அமைக்கப்பட்ட சட்ட சபைக்கு இருந்த அதிகாரத்தில் சிங்களத்தரகு முதலாளிய வர்க்கத்துக்கு 80%பலமும், தமிழ்த்தரகு முதலாளியவர்க்கத்துக்கு 6%பலமுமே கிடைத்திருந்தது. இது 1936 இல் முறையே 78% மாகவும் 16%ஆகவும் இருந்தது. எனினும் 1936 மந்திரிசபை சிங்களத்தரகு முதலாளியத்தின் ஏகபோகத்தின் கீழ் சென்றுவிடுகிறது. இந்தப்பரிதாபகரமான நிலைமையில் தமிழ்தரகு முதலாளியவர்க்கம் சோல்பரிக்குழுவின் முன் (1944) இல் 50%பிரதிநிதித்துவம் கோருகிறது (50:50 கோரிக்கை). அதுவும் நிராகரிக்கப்படுகிறது. இப்போது தான் தமிழ்க்காங்கிரஸ்(1944)"தலைநிமிர்கிறது". இங்கே ஒரு உண்மை தெட்டத்தெளிவாகிறது. தமிழர் மகாஜன சபையில் இருந்து தமிழ்க்காங்கிரஸ் வரையான இந்த 25 ஆண்டுகளிலும் வடக்குக் கிழக்குத்தமிழ்மக்களின் பொருளாதாரம், பிரதேசம், அரசியல் ஜனநாயக உரிமைகள், மொழி, மற்றும் பண்பாட்டுப்பிரச்சினைகள்சம்பந்தமான ஒரு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கோரிக்கையையோ, ஒரு நடவடிக்கையையோ மறந்தருக்கூடாலும் காணமாட்டீர்கள்!! அத்தனையும் தமிழ் வரிகத்தரகு முதலாளியவர்க்கத்தின் அதிகாரப்போட்டியோடு சம்பந்தப்பட்டவை!! மேலும் இச்சம்பவப் போக்குகள் நமக்கு உணர்த்துவதாவது;

அ) இலங்கையில் சிங்களப்பேரினவாத - பௌத்தமதவாத தரகுசியல் ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராட்டத்தில் இருந்து மக்களைத் திசைதிருப்புவதற்கான பொருத்தமான சித்தாந்த ஆயுதம் என்பதை ஏகாதிபத்தியம் இனங்கண்டு அதனை அரசியல் அதிகார அளவில் ஸ்திரப்படுத்த சிங்களத் தரகுமுதலாளியவர்க்கத்தின் ஊடாகக்கொண்டது - பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் டொனமூர் அரசியல் யாப்பை இவ்வாறுதான் புரிந்து கொள்ளமுடியும்! -.

ஆ) இத்தெருக்கடியில் தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் தனது வர்க்க நலனை அடைவதற்கு ஏகாதிபத்தியத்திடம் அதிகாரப்பிச்சை கேட்டுநிற்கிறது. கொழும்புப்பிரதி நிதித்துவத்திலிருந்து, ஐம்பதுக்கைம்பது வரை இது வெற்றியளிக்காததையொட்டியே தமிழ்மக்களைத் தன்பின்பலமாக்கிக் கொண்டு தனது 'அதிகாரப்பங்கை' சற்று அழுத்திக்கேட்க ஆசைப்பட்டது. அதாவது வடக்கு கிழக்கு தமிழர்களை நோக்கிய கொழும்புத் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் திருப்பம் அதன் சொந்தவர்க்க நலன்பாற்பட்டதாகும். இது தமிழரசுக்கட்சியின் தோற்றத்தோடு ஒரு போக்காக வளர்கிறது.

இவ்வாறு ஏகாதிபத்தியச்சுரண்டலிலும், ஏகாதிபத்திய அதிகாரத்திலும் பங்குபெறுவதற்கான 'நாய்ச்சண்டை'யில் ஈடுபடுகிற வர்க்கமாகத்தான் தரகுமுதலாளிய வர்க்கம் இருந்துள்ளது. ஆனால் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குரல் வேறு மூலைகளில் இருந்து ஒலித்துள்ளன. நாடு பிடிக்கும் ஏகாதிபத்திய கொள்ளைக்கார உலகயுத்தங்கள் நாட்டுமக்கள்மீது சுமத்திய பொருளாதார நெருக்கடிகளுக்கெதிராக தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர். ஏகாதிபத்திய நிலப்பறிமுறைக்கும், கொடிய வரிவிதிப்புக்களுக்கும் எதிராக விவசாயிகளின் தன்னியல்பான போராட்டங்கள் வெடித்துள்ளன. அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து மக்கள் போராடியுள்ளனர். இவை நம் நாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மையைக் கொண்டிருந்த போதும் தன்னியல்பான போராட்டங்களாகவே இருந்துள்ளன. இத்தன்னியல்பின் காரணமாக, ஆதிக்கம் செலுத்திய சிங்களப் பேரினவாத பௌத்தமதவாத தரகுசியலுக்கு இரையாகி இவை பலியாகிவிட்டன.

அக்காலத்தைய இடதுசாரி இயக்கங்கள் மக்களின் வாழ்நிலையைத் தீர்மானிக்கும் பொருளாதார உறவுகளைப் புரிந்துகொண்டிருக்கவில்லை. அதனால் ஏகாதிபத்திய அதிகாரத்தை தாக்கவீசவும், தரகுமுதலாளிய நிலவுடமை வர்க்கங்களை எதிர்த்தும் தேசிய விடுதலைப்புரட்சியை முன்னெடுப்பதற்கு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சிங்கள-தமிழ் தேசங்களை ஐக்கியப்படுத்தும் திட்டத்தின் மீது தமது போராட்டங்களை ஒழுங்கமைக்கவில்லை. இதனாலேயே அவற்றைத்தன்னியல்பானவை என்கிறோம். குறித்த ஒரு காலப்பகுதியில் தனது இலட்சியத்தையும், இலட்சியத்தின் எதிரிகளையும் நண்பர்களையும், விஞ்ஞான வழியில் வரையறை செய்து எதிரிகளுக்கெதிராக நண்பர்களை ஐக்கியப்படுத்தி போராட்டபாதையில் முன்னேறத்தவறுகிற எந்த ஒரு கட்சியும் எதிரிகளும் மக்களுக்குமி டையில் ஊசலாட நிர்ப்பந்திக்கப்படுகிறது ... களுக்கு நெருங்கிற

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தரி என்றவென்றால் அது எதிரிகளுக்குப் பலியாகி விடுவதாகும். எந்தக் கட்சியல்பான இயக்கத்துக்கும் இவ்விதி பொதுவாகப் பொருந்தக்கூடியது. நமது 'டொசாரிகள்' பிற்காலத்தில் சிங்களத்தரகுமுதலாளிய வர்க்கக் கட்சிகளான யு.என்.பி உடனும், எஸ்.எல்.எப்.பியுடன் கூட்டுச் சேர்ந்து வாதிகளாகச் சீரழிந்தனர் என்றால் அது 'இலங்கைத்தேசிய காங்கிரஸ்' உடன் கூட்டுமுன்னணி அமைத்து அவர்களது கொள்கைத்தவறின் தொடர்ச்சியாகவே கொள்ளப்படவேண்டும். இதுதன்னியல்பின் தலைவிதி!

இவ்வாறு தேசிய விடுதலைப்புரட்சிக்கான ஒரு திட்டத்தை முன்வைத்து முன்னேறிய வர்க்கத்தின் தலைமை மக்களுக்கு இல்லாது போனதால் சிங்கள - தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களின் தலைமை மக்கள்மீது நிறுவப்பட்டது. சிங்களப் பேரினவாத - பௌத்தமத வாத கருத்தியலின் செல்வாக்குக்கு சிங்கள மக்களும், தமிழ்க்குறுமினவாதக் கருத்துக்கு தமிழ்மக்களும் பலியாகினர். இதன்மூலம் சிங்கள - தமிழ் - இந்திய வம்சாவழி தரகுமுதலாளிய வர்க்கங்கள்தமது நலனைஅடைந்தன. மக்களின் மீது ஏகாதிபத்திய நுகத்தடி மென்மேலும் தன்னை இறுக்கிக்கொண்டது.

இந்தக் கைங்கரியத்தை ஏகாதிபத்தியத்துக்குச் செய்து கொடுத்த தரகுமுதலாளியக் கட்சிகளாகவே இலங்கை தேசிய காங்கிரஸ், தமிழர்மகாஜனசபை, இலங்கை இந்தியக்காங்கிரஸ், சிங்களமகாசபை, தமிழ்க்காங்கிரஸ் ஆகியவை இருந்துவந்துள்ளன. இவற்றின் முறைப்படியான வாரிசுகளாக ஐக்கியதேசியக்கட்சி, தமிழரசுக்கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவை தோன்றின. இந்த விதேசியக்கும்பல் காலனியாதிக்க ஆட்சியிலேயே ஏறத்தாழ 16 ஆண்டுகள் (1931-1947), ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச்சேர்ந்து மக்களை ஒடுக்கியது. இந்தக்கும்பலிடம் 1948இல் அதிகாரம்கைமாற்றப்பட்டதற்கு 'சுதந்திரம்' எனப்பெயர் சூட்டப்பட்டது. அதிகாரக் கைமாற்றத்துக்குப் பிந்திய வரலாற்றைப் புரிந்துகொள்ள இந்தச் "சுதந்திர"த்தின் பொய்மையைப் புரிந்துகொள்வது அவசியம்.

காலனியாதிக்கம் என்பது உலகுதழுவிய நிகழ்ச்சிப்போக்காகும். உலகுதழுவிய வகையில் ஏகாதிபத்தியம் சந்தித்த நெருக்கடி காலனியாதிக்கக் கொள்கையில் சில மாற்றங்கள்ஏற்படவும் காலனியாதிக்க வடிவத்தை மாற்றிக்கொள்ளவும் ஏகாதிபத்தியங்களை நிர்ப்பந்தித்தது. ஏகாதிபத்திய ஒடுக்குமுறை நுகத்தடியில் இருந்து தமது விடுதலையை வென்றெடுக்கும் காலனிநாட்டுமக்களின் தேசிய விடுதலைப்புரட்சிகளுக்கு 1917 ம் ஆண்டின் 'அக்டோபர் சோஷலிசப்புரட்சி' மாபெரும் உந்து விசையை அளித்தது. உலகெங்கும் காலனிநாடுகள் தமது விடுதலைக்காகப் போர்க்கொடி உயர்த்தின.

இந்தியாவில் ஏகாதிபத்தியச்சுரண்டல் இருவகை அரசியல் போக்குகளை அதன் ஆரம்பகாலத்திலேயே (1830களிலேயே) வெளிக்கொணர்ந்தது. ஒன்று ஏகாதிபத்திய அரசை ஆதரித்து, அரைநிலவுடைமையின் பொருளாதார வடிவத்தைக் கட்டிக்காத்து, அந்நியத்தன்மைகொண்ட அரசில் பங்கேற்கத்தூண்டும் விதேசியப் போக்காகும். மற்றையது ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலவுடைமை எதிர்ப்பு சுயதேசிய உணர்வாகும். நடுத்தர வர்க்க ஜனநாயக வாதிகளால் தலைமை தாங்கப்பட்ட இச்சுயதேசிய உணர்வு எண்ணற்ற விவசாயிகள் கலகங்களாகவும், தொழிலாளர்போராட்டங்களாகவும், ஆயுதமேந்திய கிளர்ச்சிகளாகவும் வெடித்து ஏகாதிபத்திய அதிகாரத்தை அச்சுறுத்தியது. முன்னைய விதேசியப் போக்கை [illegible]சியம். இதுவே பிரதிநிதித்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


றுவம் செய்த 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்கிற கட்சி அலன் ஒக்டேவியன் ஹியூம் என்ற வெள்ளைக்கார ஏகாதிபத்திய அதிகாரியால் தொடங்கப்பட்டது என்பது எல்லோரும் அறிந்ததே! இந்த அதிகாரி உள்நாட்டில் வளர்ந்து வந்த சுயதேசிய உணர்வு அபாயம் கூறுகிறார்;

"நம்பிக்கையற்ற ஏழைமக்கள் பட்டினி கிடந்து சாகவேண்டும் என்ற நிலையில் கொண்டு ஏதாவது செய்யவேண்டும் என்று விழைவதையே அவை காட்டின... இந்த ஏதாவது என்பது வன்முறையே. அச்சமயத்தில் அரசின்மீது அக்கிரமும் கசப்பும் கொண்ட – ஒருங்கிணைப்பில்லாமலேயே – படித்தவருப்பாரின் ஒரு பிரிவினர் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டு அங்காங்கு தலைமைப்பொறுப் பேற்று எழுச்சிக்கு ஒரு தெளிவான பொருள் தந்து அதை ஒரு தேசியப்புரட்சி யாக நடத்தலாம். எனக்கருதப்பட்டது".
(அழுத்தம் நமது, 'இந்திய தேசியத்தின் தோற்றம்', கோ. கேசவன், சிந்தனையகம் வெளியீடு, சென்னை, 1985, பக். 167)

ஓங்கப்பட்ட இந்த வாளில் இருந்து தனது தலையைப்பாதுகாக்க ஏகாதிபத்தியம் ஒரு கேடயத்தைக் கண்டுபிடித்தது. ஹியூம் கூறுகிறார்;

"நம் செயல்களால் விளைவிக்கப்பட்ட சக்திகள் மாபெரும் அளவில் வளர்ந்து அவற்றிடம் இருந்து தப்புவிக்க ஒருபாதுகாப்புக்கேடயம் உடனடியாக தேவைப் படுகிறது. நமது காங்கிரசு இயக்கத்தை விடப் பயன்தரத்தக்க பாதுகாப்புக் கேடயத்தை உருவாக்க இயலவில்லை."
(அழுத்தம் நமது; மேற்கண்டது, பக். 174)

ஹியூமின் இம்மதிப்பீட்டின் சரியான தன்மையை 1895 இல் காங்கிரஸ் – தொடங்கி 10 ஆண்டுகளின் பின் – தலைமையுரை நிரூபிக்கிறது.

"நாம் பணியாற்றுவோம்... பிரிட்டன் அரசுக்கு எவ்வித தயக்கமும் இல்லாத ராஜவிசுவாசத்துடன் இருப்போம். அப்போதுதான் காங்கிரஸை நிறுவியவர்களின் நம்பிக்கைக்கேற்ச் செயலாற்ற இயலும். இந்தியாவில் பிரிட்டன் அரசை நீக்குவ தல்ல எமது நோக்கம். அதை, அழுப்படுத்துவதாகும். அதன் தளத்தை விரிவு படுத்துவதாகும். அதன் நல்நோக்கம் இன்னும் பலருக்குக் கிடைக்கச்செய்வதா கும். அதன் பரந்த மனோபாவத்தை அதிகப்படுத்துதலாகும். இந்தியாவில் பிரி ட்டன் ஆட்சியை என்றென்றைக்கும் மாறாத நிலையில் உறுதிப்படுத்தலாகும்."
(அழுத்தம் அவர்களே!, மேற்கண்டது, பக் 175)

இந்தவிதேசிய போக்கும், ஏகாதிபத்திய நலன்களும் இந்தியாவில் ஒரு 'ஏகாதிபத்திய பக்திரி'யை தோற்றுவித்தது. "அண்ணல்காந்தி" என்றும் "அஹிம்சாமூர்த்தி" என்றும் அழை க்கப்படுகிற இந்தபக்திரி லண்டனில் படிக்கும்போது எந்த மாணவர் போராட்டத்திலும் ஈடுபட்டவர் அல்ல. 'சைவ சாப்பாட்டுச் சங்கம்' அமைத்து புலால் உணவை எதிர்த்து பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். இந்தியாவிற்குத் திரும்பியபின் மொசப்பத்தோமி யாவில் போரிடும் ஆங்கிலப்படையின் காயமுற்ற சிப்பாயிகளை தூக்கிச் செல்வதற்காக ஒரு பாடைதூக்கும் தொண்டர்படைஅமைக்கத் தயாராய் இருப்பதாக வைஸ்ராய்க்கு (பிரித்தானியாவின் இந்தியச் செயலாளர்) கடிதம் எழுதினார். முதல் உலக யுத்தத்தின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


போது பிரிட்டன் ராணுவத்திற்கு ஆள்பிடிக்கும் அதிகாரியாக சேவை செய்தார். ஒரு ராத்தில் உழவர்களை பிரிட்டிஸ் ராணுவத்தில் சேருமாறு கேட்டு பிரசுரம் வெளியிட்டார். அப்பிரசுரத்தில் "நாம் ஆயுதங்களைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வதற்காகவும், சுயராஜ்யத்தை பெறுவதற்காகவும் கிடைத்துள்ள பொன்னான வாய்ப்பு" என்று கூறி மக்களை ஏமாற்றினார் இந்த அகிம்சாமூர்த்தி!

பிரிட்டன் ஆட்சியின்போது பார்சிகளும் பனியாக்களும் பிரிட்டனுடன் பெருமளவு வியாபாரம் செய்யத்தொடங்கினர். அவர்கள் மத்தியில் இருந்துதான் தரகர்கள் உதித்தனர். ஏராளமானவியாபாரிகள் தென் ஆபிரிக்காவில் தங்கி வியாபாரம்செய்து வந்தனர். அங்கு அவர்களின் நலன்களை பாதுகாக்க ஒரு வக்கீல் தேவைப்பட்டார். காந்தியை தென்னாபிரிக்காவிற்கு அழைத்துக்கொண்டனர். அவர் அங்கு தங்கியிருந்தபோது 'போயர்கள் என்ற பிரிட்டன் அடக்கப்பட்ட மக்களுக்கும், தென்னாபிரிக்காவை அடக்க வந்த வெள்ளையர்களுக்கும் யுத்தம் நடந்தது. இந்த போயர் யுத்தத்தில் பிரிட்டனுக்கு ஆதரவான இந்தியர்களைக் கொண்ட ஒரு தொண்டர்படை அமைத்து படையாக்கும் வேலை செய்தார். இதனை அயர்லாந்து விடுதலை இயக்கப்பத்திரிகைகள் "காந்தி என்ற நோட்டால் (ஆபிரிக்காவில் காந்தி தங்கியிருந்த இடம்) இந்தியனின் கீழ்த்தரமான செய்கைகளை சொல்ல வார்த்தையில்லை" என கடுமையாகத்திட்டின.

முதல் உலக யுத்தம் முடிந்தபின் அக்டோபர் புரட்சிக்குப் பின்பு இந்தியாவில் இருந்த நிலைமைகள் காந்தியை மகாத்மா ஆக்கிவிட்டன. பயங்கரமான வறுமை, விலைவாசியேற்றம், வேலையின்மை, கறுப்புச்சந்தை என இந்தியா மோசமான நிலைமையில் இருந்தது. மாண்போர்ட் சீர்திருத்தங்கள் வந்தன. பிரிட்டிஸ் ராஜ்யத்துக்குள்ளேயே தன்னாட்சி அளிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. இது ஏகாதிபத்திய விசுவாசிகளை வென்றெடுத்து புரட்சியாளர்களை நசுக்குவதற்கான திட்டமாகும்.

எனவே தரகுமுதலாளிய வர்க்கம் மக்களை சமய நெறிகளிலேயே அடக்கி வைத்திருக்கவும், மக்களைக்காட்டி அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து காலனியை அரைக்காலனியாக மாற்றுவதற்கும் உகந்த ஒரு தலைவனை தேடியது. காந்தியை அரசியலுக்கு வருமாறு வேண்டிக்கொண்டனர். அவரும் ஏற்றுக்கொண்டார். அவர் வருவதற்கு முன்பே பெரும் முதலாளித்துவப் பத்திரிகைகள் அவரை 'மகாத்மா காந்தி' என விளாவப் புகழ்ந்தன. காந்தி வந்ததும் ஒரு திட்டத்தை வெளியிட்டார். அது முழுக்க நிலப்பிரபுக்களின், தரகுமுதலாளிகளின் கோரிக்கைகளாகும்.

இதால் ஆத்திரமடைந்த விவசாயிகள் சவ்வுரி சவுராவில் ஒரு பொலிஸ் நிலையத்தைத் தாக்கி 22 பொலிஸ்காரர்களை கொன்றுவிட்டனர். இது ஒத்துழையாமை இயக்கத்தின்போது நடந்தது. உடனே காந்தி வன்முறையைக் கண்டித்து ஒத்துழையாமை இயக்கத்தை வாபஸ்வாங்கிக்கொண்டார். அப்பொழுது அவர் "நான் ஒரு இமாலயத்தவறு செய்துவிட்டேன். சுயராஜ்யத்தின்நாற்றம் மூக்குவரை அடிக்கிறது" என்றார். அப்போது சிறையில் இருந்த சுபாஸ் சந்திரபோஸ் கோபத்துடன் 'நீ ஒரு தலைவராக இருப்பதற்கு லாயக்கு இல்லை. இமயமலையில் சந்நியாசியாக இருக்கவே லாயக்கு' என்றார். இதற்கு காந்தி திமிராக பதில் அளித்தார். 'நீ ஒரு கைதி உனக்குப் பேச உரிமை இல்லை. கைதி என்பவன் அரசியல் ரீதியாக இறந்தவன்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1930ல் ஏகாதிபத்திய எதிர்ப்பு வெகுஜனஇயக்கங்கள் இந்தியாவைச் ~~சூழ்ந்து~~ சூழ்ந்து கொண்டன. சில நகரங்களை ஆயுத எழுச்சிகள் மூலம் மக்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டனர். இந்த வெகுஜன இயக்கங்களை தடுப்பதற்காகத்தான காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கினார். அப்போது வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்தில் காந்தி கூறுகிறார், "ஒரு வன்முறையற்ற இயக்கம் தொடங்கப்படாவிட்டால் வன்முறை இயக்கம்தொடங்கிவிடும். வன்முறை ஆட்சி வளர்ந்து வருகிறது. எனவே வளர்ந்து வருகின்ற கட்சியின் கட்டமைக்கப்படாத வன்முறைக்கும், பிரிட்ஷ் பேரரசின் கட்டமைக்கப்பட்ட வன்முறைக்கும் எதிராக அஹிம்சா சக்திகளை அவிழ்த்து விடுவதற்கு இதுவே தருணம்."

இதுதான் காந்தியின் அஹிம்சையின் வர்க்க உள்ளடக்கம். காலனிய அமைப்பு முறைக்கு சேதம் விளைவிக்காமல் இந்தியத்தரகுப் பெருமுதலாளிய நிலப்பிரபு வர்க்கங்களின் நலன்களை அடைய காந்தியின் ஏகாதிபத்திய மூளை கண்டுபிடித்த தத்துவமே அஹிம்சை ஆகும்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியாவின் விடுதலையை ஆயுதப்போராட்டம் மூலமே அடைய முடியும் என்ற நம்பிக்கையோடு போராடிவந்த பகவத்சிங்கையும் அவரது தோழர்களையும் தூக்கில் போட்டுவிட்டு பிற அரசியல் கைதிகளை விடுவிப்பதற்காக 'காந்தி - இர்வின் ஒப்பந்தம்' செய்யப்பட்டது. இதில் காந்தி கையொப்பம் இட்டார். அவர் கையெழுத்திட செல்லுமுன் ஏராளமானோர் பகவத்சிங்கை விடுதலை செய்யாமல் காந்தி கையொப்பம் இடக்கூடாது என ஆர்ப்பாட்டம் செய்தனர். அதற்கு காந்தி 'பகவத்சிங் அரசியல் கைதியல்ல' எனத்திமிராகப் பதிலளித்தார். 1930 ஆண்டு அக்டோபர் 7ல் விசேஷ நீதிமன்றம் பகவத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகிய போராளிகளுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. அதுபற்றி இந்த அஹிம்சா மூர்த்தி வைஸ்ராய்க்கு ஆலோசனை சொல்லுகிறார்;

"அந்தப் பையன்களைத் தூக்கிலிடுவதாக இருந்தால் கராச்சி காங்கிரஸ் கட்டத்திற்குப் பின்னதாக இல்லாமல், முன்னதாகவே தூக்கிலிடுவதுநல்லது." காந்தியின் "அமைதிப்புரட்சி"ரூப்பினுள் மூடிமறைக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனத்திலும், தேசத்துரோகத் தனங்களிலும் இவை சில. ஆனால் இவை இந்தியத்தரகுப்பெருமுதலாளிய வர்க்கத்தின் ஏகாதிபத்திய விசுவாசத்திற்கான வரலாற்றுச் சாட்சியங்கள். இந்தியாவின் கதை இப் படி!

மத்திய கிழக்கின் மன உணர்வை ஒரு ஏகாதிபத்தியவாதி - வெண்டல் வில்கி, அமெரிக்க குடியரசுக்கட்சியின் சார்பில் 1940ஆம் ஆண்டின் ஜனாதிபதித்தேர்தலில் ரூஸ்வெல்ட்டுடன் போட்டியிட்டவர். இவர் எழுதிய 'ஒரே உலகம்' நூலில் (1945) சித்தரிப்பதைப்பாருங்கள்;

"இந்த ஜனங்களுக்கு ஒரு புதிய பசி உண்டாகியிருக்கிறது; பழைய மதத்தலைகள் 'அரசாங்கத் [illegible] இந்த விடுதலைபெற வேண்டும். பசி. தங்கள் சொந்த நிர்வாக [illegible] மேல் உட்கார்ந்து [illegible] நக்கும் அந்நிய மேலதிகாரிகளும் தங்களுடைய இந்தப்பசியைத் தீர்க்காவிட்டால், புதிய விழிப்படைந்த இந்த ஜனங்கள் இந்தத்தலைமுறையிலேயே எவரோ ஒர் தீவிரவாதத் தலைவரைத்தான் பின்பற்றிவிடப் போகிறார்கள். மூடமை, பெரு[illegible]ல்லர, நோய், அசுத்தம், கல்விக்குறைவு, நவீனத் தொழில் குறைவு. அரசாங்கத்தின் எதேச்சாதிகாரம் இவையெல்லாம் ஒன்று சேர்ந்திருப்பதை, நாங்கள் [illegible] அந்நிய அதிகாரத்தின் சுயநலமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஒன்று கூடிய ஒரு கூட்டுறவாக அவர்கள் எண்ணுகிறார்கள். அந்தக் கூட்டுறவே பழைமையைத், தங்கள் நிலையில் சுமந்து வைத்திருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்." (அழுத்தம் நமது)

மத்திய கிழக்கிற்கு உரிய சில தனித்தன்மை நீங்கலாக இவை எல்லாக் காலனி நாட்டு மக்களுக்கும் பொருந்தும். மேலும் அவர் கூறுகிறார்;

"இந்தப் பிரச்சனையை நாம் சமாளித்தாக வேண்டும். இல்லையானால் மூர்க்க வெறிபிடித்த ஒரு புதிய தலைவன் தோன்றி விடுவான். அவன் இந்த அதிருப்திக்காரர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்துவிடுவான். அதன்பலன் என்ன ஆகும்? ஒன்று அந்நிய அரசுகள் அடியோடு அங்கிருந்து வாபஸ் ஆகிவிடவேண்டும்; அதனால் அங்கே ஜனநாயகத்தின் (காலனித்துவ அமைப்பு முறையின்) செல்வாக்கு அடியோடு அற்றுப் போய்விடும். அல்லது இந்த நாடுகளை அந்த அந்நிய அரசுகள் முற்றும் ராணுவபலத்தால் (மக்களின் எதிர்ப்புக்களை ஒடுக்குவதற்கு) ஆண்டு நிர்வகித்துவர வேண்டும்." (அழுத்தம் நமது).

ஆக காலனி நாடுகளின் மீதான ஏகாதிபத்திய அதிகாரம் "அடியோடு" நீங்கி விடாமலும், ஏகாதிபத்திய ஆதிக்கமுறைக்கு எதிரான காலனிமக்களின் "ஆபத்தான உள்ளக்கிளர்ச்சிக்கு" ஒரு வடிகாலாகவும் அமையக்கூடிய ஒரு தீர்வை 'காலனித்துவ ஆட்சிக்கு மாற்றாக' முன்வைத்துத் தீர வேண்டிய நெருக்கடிக்குள் ஏகாதிபத்தியம் சிக்கிக் கொண்டது.

காலனித்துவ ஆட்சிக்காலத்திலேயே 'ஏகாதிபத்திய அதிகாரத்தில் பங்கு' கோரி அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து மக்களை ஒடுக்கிவந்த தரகுமுதலாளிய வர்க்கங்களின் கையில் அதிகாரத்தைக் கைமாற்றிக்கொண்டதன் மூலம் ஏகாதிபத்தியச்சுரண்டலுக்கு எந்தவித கெடுதலும் நேராத வகையில் இம்மாபெரும் பிரச்சனை 'தீர்க்கப்பட்டது'. காலனியாதிக்கம் அரைக்காலனியாதிக்க நிலைக்கு மாறியது. இதற்கு "சுதந்திரம்" எனப் பெயர் சூட்டிக்கொண்டனர்.

0----0------------------------------------------------0 ---

"இந்தியத் தொழிலாளர் சார்பில் நீங்கள் நீண்டகாலமாகச் செய்த முயற்சிகள் வெற்றிகரமாக முடிந்துள்ளமை தங்களுக்குப் பேருவகை நல்கியிருக்க வேண்டும். நம் எல்லோரிடமிருந்தும் நன்மை பெறுவதற்குப் போதிய தகுதி வாய்ந்த இம்மக்கள் வாழ்வில் திருப்தியளித்தமை தமை (பிரித்தானிய) சாம்ராஜ்யத்துக்குச் செய்த ஒரு உண்மையான யான சேவையாகும்."

(ரூப்பிரபு 1922ஜூலை 27ல்
சேர். பொன். அருணாசலத்திற்கு எழுதிய
கடிதத்தில் இருந்து.)

0------------------------------------------------0

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ந்துப்பார்த்தால், ஏகாதிபத்தியம் தன்னுடைய ஆட்சிக்கான — சுரண்டலுக்கான முக்கிய ஆதார ஊன்றுகோல்களாக தரகுமுதலாளிய வர்க்கத்தையும் நிலவுடமை வர்க்கங்களையும் ஆக்கிக்கொண்டனர். இவ்வர்க்கங்கள் காலனித்துவ ஆட்சிக்காலத்திலேயே தமது எஜமான விசுவாசத்தை நிரூபித்துக்கொண்டன. அதிகாரப் பங்கீட்டு கோரிக்கை, மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் சமரசத்துப் பாத்திரம், ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்குமான சமூக ஆதரவு என்பவற்றால் இது சாதிக்கப்பட்டது. மறுபுறம் தம்முள்ளான தரகுமுதலாளியப் போட்டியின் காரணமாக மக்களைச் சிங்களப் பேரினவாத பௌத்தமதவாத கருத்தியலிலும், தமிழினவாதத்திலும் பயிற்றுவித்துக் கொண்டன. இவ்வாறு ஒரு சமூகப் பின்பலத்தையும் தேடிக்கொண்டன. ஏகாதிபத்தியம் தனது சுரண்டல் நலன்களுக்காக நமது நாட்டின் சமூக வளர்ச்சியை முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையை தகர்த்து முன்னேற அனுமதிக்கவில்லை. இது ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு கூட்டாளிகளான தரகுமுதலாளிய நிலவுடமை வர்க்கங்களை நிலைநிறுத்துவதற்கான அடித்தளமாக விளங்குகிறது. இவ்வடித்தளத்தை பாதுகாக்கும் வகையில் ஏகாதிபத்தியம் நிறுவிக்கொண்ட மேற்கட்டுமானங்களான பாராளுமன்றம், படைகள், நீதிமன்றம், (சோல்பரி) அரசியல்யாப்பு, சட்டங்கள், நவீனக் கல்விமுறை மற்றும் அனைத்தும் அவ்வாறே கெட்டியாக இருக்கத்தக்கதாக, தன்னோடு கூட்டுச்சேர்ந்து 16 ஆண்டுகாலம் மக்களை ஒடுக்கிவந்த தரகுமுதலாளிய (நிலவுடமை) வர்க்கங்களிடம் அதிகாரத்தை மாற்றிக் கொள்கிறது. ஏகாதிபத்தியம் தனது உலகு தழுவிய காலனியாதிக்கக் கொள்கையில் சந்தித்த நெருக்கடிகள் அதனை அரைக்காலனியாதிக்க வடிவத்துக்கு மாற்ற நிர்ப்பந்தித்தன. காலனியாதிக்கத்தில் கண்ணுக்கு முன்னால் நின்ற ஏகாதிபத்தியம், அரைக்காலனியாதிக்கத்தில் "சுதந்திர" திரைக்குப்பின்னால் ஒழிந்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஒரு 'முகத்திரையே' நமக்குச் சொல்லப்படுகிற "சுதந்திரம்." உண்மையில் இப்போது ஏகாதிபத்தியம் கண்ணுக்குத் தெரியாத எதிரியாக நீடிக்கிறது.

சுதந்திரத்துக்கான நாளையும் தானே தீர்மானித்து சுதந்திரத்துக்கும் பின்னர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான ஒப்பந்தங்களையும் செய்துகொண்டு ஏகாதிபத்தியம் தட்டில் வைத்துக் கொடுத்த இந்தச்சுதந்திரம் தரகுமுதலாளிய நிலவுடமை வர்க்கங்களுக்கான சுதந்திரமே தவிர மக்களுக்கான சுதந்திரமல்ல. மக்களை முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறையின் கொடூரத்திலும், அரைக்காலனிய ஒடுக்குமுறை தகத்தடியின் கீழும் அடிமைகளாக வாழவைக்கவே இந்தச் "சுதந்திரம்" பயன்பட்டு வந்திருப்பதை கடந்த 40 ஆண்டுகால வரலாறு தெட்டத்தெளிவாக நிரூபிக்கிறது.

0---------------------------------------0

"பிரித்தானிய அரசின் நீதியின் மீது மக்களின் நம்பிக்கையை ஈடாடச் செய்யத்தக்க வகையில் எக்கருமமும் நிகழல் கூடாது."

(1915 இல் 'முஸ்லிம் கலவரம்' இராணுவச்சட்டத்தினூடு அடக்கப்பட்ட பின்னர்
சட்டநிரூபண சபையில் சேர். பொன்.
[illegible] )

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலனியாதிக்க ஆட்சியில் சிங்கள - தமிழ்த் தரகு முதலாளிய வர்க்கங்களிடையே அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்வதில் பிரச்சனைகள் எழுந்துள்ளன. சிங்களத்தரகு முதலாளியத்தின் ஏகபோக அதிகாரத்துக்கான அவாவும், சிங்களப் பேரினவாத-பௌத்தமத வாத கருத்தியலின்வளர்ச்சியும், இன்னொ ஏகாதிபத்தியம் தனது உடனடிமற்றும் நீண்டகால சுரண்டல் நலன்களின் நோக்கி அரவணைத்து வைத்திருந்த தமிழ்த்தரகுமுதலாளியத்தை அச் சுறுத்தி வந்துள்ளன. இதன் காரணமாக கொழும்பை தனது இருப்பிடமாகக் கொண்டிருந்த தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம், வடக்குக் கிழக்கு வாழ் தமிழர்களை நோக்கிச்சாயத் தொடங்கியது.

அதிகாரக் கைமாற்றத்தின் பின்னால் சிங்களத்-தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களின் உறவு நிலையில் ஒரு கொள்கைரீதியான மாற்றம் ஏற்படுகின்றது. இம்மாற்றத்தைத் தொடர்ந்து தமிழ்த்தரகு முதலாளிய வர்க்க நலன்களைக் காத்துக்கொள்ள வடக்குக் கிழக்கு தமிழர்களை தனது சமூக அடிப்படையாக மாற்றிக்கொள்வது தவிர்க்க இயலாத அவசியமாகிவிடுகிறது. 1920இல் ஆரம்பித்த, தமிழரசுக்கட்சியின் தோற்றத்தோடு ஒரு ஒரு போக்கை, (THEND )வளர்கிறது. இனிமேல் தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் தனது சொந்த நலனுக்காக மட்டுமல்ல தமிழ்மக்களின் நலனுக்காகவும் பேசுவதுபோல் இருக்கவேண்டும். இனிவரும் தமிழ்த்தரகு முதலாளியம் தமிழ்மக்களைப் 'பகடைப் பாட்டை' அடுத்துக் காண்போம்!

2. <u>தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின்</u>

<u>எழுச்சியும் அதற்கான அடிப்படையும்.</u>

காலனித்துவ ஆட்சியில் ஏகாதிபத்தியம் வழங்கிய அதிகாரத்தை பங்கிட்டுக்கொள்வதில் சிங்கள - தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களிடையே ஏற்பட்ட போட்டி தமிழ்த் தரகு முதலாளியத்தை வடக்கு கிழக்கு தமிழ்மக்களை நோக்கிச் சாயச் செய்ததை முற்பகுதியில் கண்டோம். தரகுமுதலாளிய வர்க்கங்களுக்கிடையேயான போட்டி 1915இல் முஸ்லீம் வணிகத்தரகுமுதலாளியத்தை அடித்துவிழுத்தியதையும், 1930களோடு இந்திய வம்சாவழி வணிகத்தரகுமுதலாளியத்துக்கெதிராக திரும்பியதையும் இவ்விரு சந்தர்ப்பங்களிலும், சிங்கள - தமிழ்த் தரகுமுதலாளியவர்க்கங்கள் கூட்டுச்சேர்ந்து நின்றதையும் பார்த்தோம். 'கொழும்புப் பிரதிநிதித்துவம்' நிராகரிக்கப்பட்டமை (1920), 1931 தேர்தலில் 6%பங்கே கிடைத்தமை, 1936 மந்திரிசபையில் சிங்களத்தரகு முதலாளிய வர்க்கத்தின் ஏகபோகம் நிலவப்பட்டமை, தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் 'சம அதிகாரக் கோரிக்கை' (50:50) சோல்பரி ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டமை ஆகியன சிங்கள -தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களின் உறவில் விரிசலை ஏற்படுத்தி வந்தன. இவ்வரலாற்றின் தொடர்ச்சியாகவே 'அதிகாரக்கைமாற்றம்', மலையகத்தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதோடு சிங்கள - தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களின் உறவில் ஒரு கொள்கை ரீதியான மாற்றம் உருவாகிறது. தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள தமிழ் மக்களைத் தனது ஆதாரமாக்கிக் கொள்வது தவிர்க்கவியலாத அவசியம் ஆகிவிட்ட போதுதான் 'தமிழ் மக்களின் பிரச்சனைகள்' தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுகின்றன. அப்போதுங்கூட தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்கு முன்வைக்கப்பட்ட தீர்வுகளும், நடத்தப்பட்ட போராட்டங்களும் தமிழ்த்தரகுமுதலாளிய நலனைஅடைந்துகொள்வதற்கு அப்பால் செல்லாதவாறு பார்த்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகாரக்கைமாற்றத்தின் முதற் சாதனை மலையகத்தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டமையே என்பது எல்லோரும் அறிந்ததே! - இதன் மூலம் வாக்குரிமை அளிக்கத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டோர் 1) புத்தி சுவாதீனமற்றவர், 2) கைலஞ்ச ஆள்மாறாட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளானவர், 3) மலையகத் தொழிலாளர்!! இந்த மானங்கெட்ட செயல் சிங்களத் தரகுமுதலாளிய வர்க்கத்தின் ஜனநாயகப் பண்புக்கும், இவர்கள் பெற்றுக்கொண்ட "சுதந்திரம்" தான் என்பதற்கும் போதுமான சான்று என்பதை போகிற போக்கில் சொல்லிக் கொள்கிறோம் - மலையகத்தமிழரின் வாக்குரிமையே இந்திய வம்சாவழித்தரகுமுதலாளிய வர்க்கத்தின் அரசியற் பலமாக அமைந்தது. இது பாராளுமன்றத்தில் அவர்களுக்கு 10 பிரதிநிதித்துவத்தை தேடிக்கொடுக்க வல்லதாக இருந்தது. சிங்கள - இந்திய வம்சாவழி வர்க்கத்தரகுமுதலாளியவர்க்கங்களிடையே எழுந்த போட்டி இவ் அரசியற் பலத்தை தகர்ப்பதை அவசியமாக்கியது. 1930 களில் தீவிரமடைந்த இம்மோதல் 1948இல் அதிகாரம்கைக்கெட்டியதோடு ஒரு முடிவுக்கு வந்தது.

வாக்குரிமையைப் பறித்ததானது, அரசியல் அதிகாரத்தின் தனது ஏகபோகத்தை நிலைநிறுத்தும் சிங்களத்தரகுமுதலாளிய வர்க்கத்தின் முயற்சியாகும். இதுவே தமிழ்த்தரகு முதலாளியத்தை அச்சுறுத்தியது. அதிகாரக்கைமாற்றத்துக்கு முன்னர் நின்றது போல் இனி மேலும் இந்த ஏகபோக விருப்பத்துக்கு எதிர்நின்றால் அது தன் தலைக்கே ஆபத்து என்பதை செல்வநாயகம் உணர்ந்துகொண்டார். இந்த நிலையில் சிங்கள - தமிழ் தரகுமுதலாளியவர்க்கங்களிடையேயான உறவு குறித்த ஒரு கொள்கை பிரச்சனை எழுகிறது. ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் கருத்துப்படி; 'சிங்களத்தரகுமுதலாளியத்தின் ஏகபோகத்துக்கு எதிரேபோய் அது போடுகிற பிச்சையை வாங்கிக்கொண்டு அண்டிப்பிழைப்பதாகும்! இதற்கு அவர் வைத்த பெயர் "இணைப்பாட்சி". செல்வநாயகத்தின் கருத்துப்படி; 'இது தலை போகிற காரியம்; சிங்களத்தரகுமுதலாளிய வர்க்கத்துடனான கூட்டுறவை முறித்துக் கொள்ளாமலே, தமிழ்மக்களை தன் சமூக அடிப்படையாக மாற்றி அவர்களது பின்பலத்தில் தங்கியிருந்து, போடுகிற பிச்சையை வாங்குபவர்களாக இல்லாமல் போராடி அதிக அதிகாரத்தைப் பெறுவதற்கு முயல வேண்டும்' என்பதாகும். இதற்கு அவர் வைத்த பெயர் "சமஷ்டி". ('மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி'.) இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்காக வேண்டும். இவர்களுடைய பிரச்சனையும் சரி, அதற்கு கண்டு கொண்ட தீர்வும் சரி தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் நலன்கள் சம்பந்தப்பட்டவை. இதற்கும் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்கும் அல்லது மலையகத் தமிழர்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. சிங்களத்தரகுமுதலாளிய வர்க்கத்தின் அதிகாரத்தை ஏகபோகமாக்கிக்கொள்ளும் போக்கில் இருந்து, தமிழ்தரகுமுதலாளியவர்க்க நலனை எவ்வாறு காத்துக்கொள்வது என்ற கொள்கைப்பிரச்சனையில் தமிழ்க்காங்கிரஸ் உடைந்து சமஷ்டிக்கட்சி ( FEDERAL PARTY ) 1949 இல் தோன்றியது.

தன்வர்க்க வெட்பை மூடிமறைப்பதற்காக தமிழரசுக்கட்சி ஒரு பொய்யோடு பிறந்தது. "மலையகத்தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதற்கு எதிராகவே தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்து தமிழரசுக்கட்சியை செல்வநாயகம் உருவாக்கினார்" என்பது அந்தப்பொய். வரலாற்றைத்திரித்துப்புரட்டுகிற இந்தக்கும்பல் 1948 முதல் 1955 வரையான யு.என். [illegible] டி போராட்டத்தில் இறக்கவில்லை. இந்த மானங்கெட்ட செயலுக்கெதிராக வடக்கு கிழக்கு தமிழர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மத்தியில் தொடர்ச்சியான பிரச்சார இயக்கத்தைக் கொண்டு செல்லவில்லை. 1950 எஸ்.எல்.எவ்.பி ஆட்சிக்காலத்தில் பண்டா – செல்வா ஒப்பந்தத்தின் மூலம் தமக்கு அற்பசலுகைகள் கிட்ட வேண்டும் என்ற நப்பாசையில் பண்டாரநாயக்காவின் வேண்டுதலுக்கிணங்க மலையகத்தமிழரின் வாக்குரிமை கோரிக்கையைக் கைவிட்டுவிட்டது. மீண்டும் 1965 இல் ஐக்கிய தேசியக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து "தேசிய அரசாங்கம்" அமைத்தபோது இதனை முன்நிபந்தனையாக வைக்கவும் இல்லை. இன்றுப் பிந்திய முழுவரலாற்றிலும் இப்பிரச்சனைக்காக தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் எந்த முன்முயற்சியும் எடுத்துக் கொண்டதில்லை. 'பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்.!!

இலங்கையின் அதிகாரக்கைமாற்றத்துக்கு' பிந்திய வரலாற்றை மிகவும் மேலெழுந்தவாரியாக ஒப்புநோக்கும் ஒருவருக்குக்கூட தமிழ்வணிகத் தரகுமுதலாளிய வர்க்கம், சிங்களத் தொழிற்றுறைத் தரகுமுதலாளியக்கட்சியான இலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலங்களில் போராடப் புறப்பட்டிருப்பதும், சிங்களவணிகத் தரகுமுதலாளியக்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலங்களில் ஓய்வெடுத்துக்கொண்டதும் எளிதில் புலனாகும். இந்நடத்தையை தீர்மானித்தது எது?

யு.என்.பி உம், எஸ்.எல்.எவ்.பி உம் சிங்களத்தரகுமுதலாளிய வர்க்கத்தின் வணிகத்துறை, தொழிற்றுறை, பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்த சிங்களப்பேரினவாதக் கட்சிகளாகும். தமிழ் மக்களை ஒடுக்குவதைப் பொறுத்தவரைக்கும் இவ்விருகட்சிகளும் 'அஞ்சல் ஓட்டமே' நடத்தின. ஒன்று விட்ட இடத்திலிருந்து மற்றையது ஒடுக்குமுறையைத் தொடரும். எனவே யு.என்.பி. ஆட்சிக்காலங்களில் போராட்டங்கள் கைவிடப்படுவதற்கு எந்தத் தர்க்க நியாயமுமில்லை...; இவை தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களாக இருந்திருக்குமானால்! உண்மையில் இந்தப் போராட்டங்கள் தமிழ்மக்களின் நலன்களை அடைவதற்காக நடத்தப்பட்டவையல்ல; எஸ்.எல்.எவ்.பி யினரின் 'பண்ட ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுக்கொள்கை', பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை' போன்ற தொழிற்றுறை. தரகுமுதலாளிய வர்க்கத்தின் நலனைப்பேணுவதற்கான வணிகக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளால் பாதிப்படைந்த தமிழ் வணிகத்தரகுமுதலாளிய வர்க்கம்தமது வணிகநலன்களை காத்துக் கொள்ள நடத்திய போராட்டங்களே இவையாகும். யு.என்.பி. யினரின் பொருளாதார கொள்கைகள் வணிகத்தரகுமுதலாளிய நலன்களுக்கு வாய்ப்பாக அமைந்தமையால் தமது வர்க்க நலனை அடைந்து கொள்ளவும், சிங்கள வணிகத்தரகுமுதலாளிய வர்க்கத்துடனான வர்க்க ஐக்கியத்தை பாதுகாத்துக்கொள்ளவும் இவர்கள் தமிழ்மக்களையும் போராட்டங்களையும் கைவிட்டு வந்தனர்.

இதனால் அடிப்படையில் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்துக்கு தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படுவது ஒருபோதும் பிரச்சனையாக இருந்தது இல்லை. சுயநிர்ணய உரிமையை மறுத்துக்கொண்டே தமிழ்மக்கள்மீது அதிகாரத்தைச் செலுத்துவதில் தனக்கும் உரிய பங்கு கிடைக்க வேண்டும் என்பதிலேயே பிரச்சனை எழுகின்றது. இந்த அதிகாரப்பங்கு தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் நலன்களைக் காப்பதற்கானவையே தவிர தமிழ்மக்களின் நலன்களைக் காப்பதற்கல்ல என்பது சொல்லாமலே புரியும்.. மத்தியில் இந்த அதிகாரம் போதுமான அளவு 'கவனிக்கப்படுமானால்' மாநிலத்தில் தமிழ்மக்களை ஒடுக்கும் பாத்திரத்தை தானே செய்வதற்கு தயாராக உள்ளது. எப்படியும் இந்த அதிகாரத்தை பெற்றுவிடுவதற்காக அது விடாப்பிடியாக முயல்கிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எனவே சிங்கள - தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்களைப் பொறுத்தவரையில் அவை சுய நிர்ணய உரிமைக்கு எதிரானவை ஆகும். அரசியல் அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டுள்ள சிங்களத்தரகு முதலாளிய வர்க்கம் வன்முறை கொண்டு ஒடுக்குவதன் மூலம் ஏகாதிபத்தியத்திற்கு சேவகம் செய்கிறது. அதிகாரத்தில் பங்கு பெறுவதற்காகப் போராடுகின்ற தமிழ் தரகுமுதலாளிய வர்க்கம் சுயநிர்ணய உரிமைப்பாதையில் இருந்து தமிழ்மக்களை திசைதிருப்பி சீரழிக்கும் சமரசசக்திப் பாத்திரத்தின் மூலம் ஏகாதிபத்தியத்திற்கு சேவகம் செய்கிறது. இங்கே வழிமுறைகள் தான் வேறுபடுகின்றன. தேசியப்புரட்சியை ஒடுக்குவதில் சிங்கள தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்கள் ஒன்றுபடுகின்றன.

அதிகாரக் கைமாற்றத்துக்குப் பிந்திய அரை காலனிய இலங்கை அரசு, காலனியாதிக்கச் சுரண்டலைத் தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. 1950களின் ஆரம்பத்தில் இந்நெருக்கடி கூர்மையடைந்து உணவுப் பொருட்களுக்கான மானியங்கள் வெட்டப்படுமளவுக்குச் சென்றது. இதற்கு எதிரான 1953ம் ஆண்டின் ஹர்த்தால் அரசுஎந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்து பிரதம மந்திரியை பதவி இறக்கியது. சர்வஜன வாக்குரிமையும், 1940 களில் சுயபாஷைக்கல்வி விரிவடைந்தபோதும் அரசியல் அதிகாரத்திலும், அரசநிர்வாகத்துறைகளிலும் ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்த (1832.1956) சொத்துடைய மேட்டுக்குடியினரின் ஆதிக்கம் பாதுகாக்கப்பட்டு வந்தது. பெருகிவந்த 'வேலையில்லாதத் திண்டாட்டத்தால்' பாதிக்கப்பட்ட குட்டிபூர்சுவா வர்க்கம் 'ஆங்கில ஆட்சிமொழிக்கொள்கைக்கு' எதிராக 'சுயபாஷைக்கோரிக்கையை முன்வைத்தது. இக்கோரிக்கை ஆரம்பத்தில் தமிழ், சிங்கள இருமொழிகளையும் ஆட்சிமொழியாக்கும் கோரிக்கையாகவே முன்வைக்கப்பட்டது என்பது முக்கியமானது. சிங்களத்தரகு பூர்சுவா வர்க்கங்கள் இருமொழிக்கொள்கையை ஆரம்பத்தில் வரவேற்றுப் பேசியது இதன் காரணமாகவே! ஆனால் சுயபாஷைக் கோரிக்கை ஆளும் (ஐக்கிய தேசியக் கட்சி)கும்பலுக்கு எதிராகத் திரும்புகிறது. ஒரு ஒரு நெருக்கடியாலும், உற்பத்தி வாய்ப்பற்ற விவசாயத்தில் இருந்து வேறு பிரிந்தஉபரிச்சனத் தொகைக்கு உற்பத்தி வாய்ப்பளித்துத் தீரவேண்டிய நெருக்கடியாலும், ஏகாதிபத்தியச் சுரண்டலின் காவல்நாய்களாக விளங்கும் சிங்களத்தரகு பூர்சுவவர்க்கங்களுக்கு இந்நெருக்கடிக்கு எதிரான எதிர்ப்புக்களை திசைதிருப்ப வேண்டியது அவசியமாகிவிட்டது.

நாடுதழுவிய இப்பிரச்சனைக்கு ஏகாதிபத்தியச்சுரண்டலை ஒழித்து சுதந்திர, முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் தீர்வுகாண்பதற்குப் பதில், சிங்களகுட்டி பூர்சுவா வர்க்கத்தை தமிழ்மக்களுக்கு எதிராக திருப்பி தமிழர்களுக்கிருந்த வாய்ப்புக்களைப் பறித்துக்கொடுப்பதன் மூலம் "தீர்வு காணப்பட்டது." இதனால் குட்டிபூர்சுவா வர்க்கத்தின் சுயபாஷைக் கோரிக்கை சிங்களத்தரகு பூர்சுவா வர்க்கங்களால் தனிச்சிங்களக் கோரிக்கையாக உருச்சிதைக்கப்பட்டது. "தனிச்சிங்களச் சட்டம் சிங்களவருடைய வேலையில்லாப் பிரச்சனையைப் போக்கும் எனக்கூறப்பட்டது" (பீற்றர்கெனமன்). இதன்மூலம் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவும், அரைக்காலனிய அரசுக்கெதிராகவும் சென்றிருக்கவேண்டிய போராட்டம் தமிழ்த்தேசிய இனத்துக்கு எதிராக திருப்பப்பட்டுவிட்டது. "தேசியவாதி" பண்டாரநாயக்காவின் சாதனை இது!!

இதன்மூலம் சிங்களத்தரகுமுதலாளிய வர்க்கம் தனது பிற நோக்கங்களையும் சாதித்துக்கொண்டது. தரகுமுதலாளிய வர்க்கங்களுக்கிடையான போட்டியில் சிங்களத்தரகு முதலாளியவர்க்கத்தின் நிலை உயர்த்தப்பட்டது. 'சிங்களப் பேரினவாத - பௌத்தமதவாதம்' மலையகத்தமிழரின் வாக்குரிமைபறிக்கப்பட்டதோடு சிங்கள ஆளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வர்க்கங்களின் பின் சிங்கள மக்களைக் கட்டிப் போடுவதற்கான சித்தாந்த ஆயுதமாக இடப்பட்டுவிடுகிறது. 1950 களில் இலங்கையின் அரைக்காலனிய அரசை இச்சித்தாந்த அடிப்படையில் கட்டியமைத்து சிங்கள மயப்படுத்துவதற்கான முயற்சி ஆரம்பமாகிறது. இதன் முதல் நடவடிக்கை அரசுத்துறையில் இருந்து தமிழ்மக்களை வெளியேற்றுவதாகும். அரசுத்துறையில் தனிச்சிங்களப் பிரயோகத்தை சட்டபூர்வமாக்கியதன் மூலம் சிங்களத்தரகு முதலாளியவர்க்கம் இதனையும் சாதித்துக் கொண்டது. தமிழரசுக்கட்சியினரின் 1957இன் ஸ்ரீ எதிர்ப்புப்போராட்டமும், 1961இன் சத்தியாக்கிரகமும் இத்தனிச்சிங்களப்பிரயோகத்தை எதிர்த்து நடத்தப்பட்டவையே. இப்போராட்டங்கள் தமிழ்மக்களை தம் பின் பலமாக்கிக் கொள்ளும் அவர்களது நோக்கத்தை நிறைவேற்றி வைத்தன.

"1956 ஜூன் 14ம் நாள் சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாகும் என்ற சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. 1956இன் 33ம் இலக்க அரசகருமமொழி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தமிழ் அல்லது ஆங்கில மொழிமூலம் அரச சேவையில் சேரும் சகல ஊழியர்களும் மூன்று ஆண்டுகளில் சிங்கள மொழியில் தேர்ச்சிபெற வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவ்வாறு தேர்ச்சிபெறத்தவறுவோரின் வழமையான சம்பள உயர்வு இடைநிறுத்தி வைக்கப்பட்டது. குறிப்பிட்டகால எல்லையுள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறத்தவறிய அரச ஊழியர்கள் வேலைநீக்கஞ் செய்யப்பட்டனர்". இதன் விளைவை அட்டவணை 1 எடுத்துக் காட்டுகிறது.

வேறு விபரங்களில் இருந்து இக்காலப்பகுதியில் (1956-70) அரசுத்துறை சராசரியாக 82% சிங்களமயமாக்கப்பட்டுள்ளது.

இந்த மெய் விபரங்கள் நமக்கு எடுத்துக்காட்டுவது என்ன? தன் தலைவிதியைத் தீர்மானிக்கும் உரிமையற்றிருக்கிற ஒருதேசிய இனத்தின் தலைவிதியை சிங்கள தரகுமுதலாளிய வர்க்கம் எவ்வாறு தீர்மானித்தது என்பதைத்தான். அரசுத்துறையில் இருந்து தமிழர்கள் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளப்பட்டார்கள்!

அட்டவணை (1) அரசுத்துறைகளில் தமிழர் விகிதாசாரம்

| துறைகள் | 1956 | 1965 | 1970 |
|---|---|---|---|
| நிர்வாகத்துறை | 30% | 20% | 5% |
| எழுதுவினைஞர் | 50% | 30% | 5% |
| மருத்துவம், பொறியியலாளர், விரிவுரையாளர் | 60% | 30% | 10% |
| ஆயுதப்படையினர் | 40% | 30% | 1% |
| தொழிலாளர்பிரிவினர் | 40% | 20% | 5% |

எனவே மொழிப்பிரச்சனையில் தமிழ்மக்களின் நலனுக்காக குரல் எழுப்புகிற ஒரு கட்சியாக இருந்தால் அது சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் எழுப்பியிருக்கவேண்டும். 'தாய்மொழிக் கொள்கை'யை முன்வைத்துப் போராடியிருக்க வேண்டும். மேலும் அரைகாலனிய அமைப்புமுறையை தூக்கியெறிவதை நோக்கி தொடர்ச்சியான பிரச்சார இயக்கத்தையும் கிளர்ச்சி நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்க வேண்டும்.

ஆனால் தமிழ்த்தரகு முதலாளியவர்க்கம் செய்தது என்ன? அது தனிச்சிங்களச்சட்டத்தின் அரசு எந்திரத்தை சிங்களமயமாக்கும் நோக்கம், சிங்கள பெரும்பான்மையினரின் தரகு முதலாளியவர்க்க இயல்பில் இருந்து வருவதை மூடிமறைத்துவிட்டது. அரைக்காலனிய அமைப்புமுறையில் இவ் இன ஒடுக்கலில் இருந்து விடுதலைபெற சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதில் இருந்து தமிழ்மக்களை திசை திருப்பிவிட்டது. இந்த வரம்புக்கு உள்ளே

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நின்றுதான் அது போராட்டத்தில் குதித்தது. அப்போராட்டம் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்துக்கு அவசியமாகியது, ஆட்சியில் பங்கு எஸ்.எல்.எவ்.பி. யோ என்பதாலாயும் என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறோம்! "தூக்குமேடை பஞ்சுமெத்தை" "துப்பாக்கிக்கு அஞ்சமாட்டோம்" இவை சத்தியாக்கிரகத்தின் வீரமுழக்கங்கள்! அடுத்த பொதுத்தேர்தல் வருகிறது. தமிழரசுக்கட்சி பெரும் வெற்றியடைகிறது. ஐக்கிய தேசியக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து "தேசிய அரசாங்கம்" அமைக்கிறது. அதிகாரப்பங்கை அடைந்து தொண்டரும் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டது. இந்தக் கசப்பான உண்மையை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்வார்களோ என்னவோ; 1965 - 1969 வரை தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்தில் அங்கம் வகித்த காலத்தில் அரசுத்துறையில் இருந்து தமிழ்மக்கள் விரட்டியடிக்கப்பட்ட வீதாசாரம் முந்தைய ஆட்சிக்காலத்தை விட பன்மடங்கு அதிகமாக இருந்ததை அட்டவணை 1 காட்டுகிறது! எது உண்மை? தமிழரசுக்கட்சியினர் தமிழ்மக்களின் பிரச்சனைகளுக்காகப் போராடினார்களா? தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் நலன்களை அடைய தமிழ்மக்களின் பிரச்சனையைப் பயன்படுத்தினார்களா?

மேலும் இவர்கள் செய்துகொண்ட இரண்டு ஒப்பந்தங்களைப் பார்ப்போம்;

பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957 ஜூலை) கூறுகிறது;

"வடமாகாணத்தை ஒரு மாவட்ட சபைப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி கிழக்கு மாகாணத்தை இரண்டு அல்லது மூன்று மாவட்ட சபைப்பிரதேசங்களாகப் பிரித்தல்"

டட்லி -செல்வா ஒப்பந்தம் (1965 மார்ச்) கூறுகிறது:

"இரு தலைவர்களாலும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான அதிகாரங்களைக் கொண்ட மாவட்ட சபைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். எனினும் தேசிய அவசியங்களை கருத்திற் கொண்டு மேற்படி சபைகளுக்கு பணிப்புரை வழங்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருத்தல் வேண்டும் எனவும் உடன்பாடு காணப்பட்டது."

இவை சுட்டிக்காட்டும் உண்மைகள் இவை;

அ) தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்களை துண்டாடி தமிழ்மக்களை ஒரு தேசிய இனமாக இல்லாதொழிக்கும் சதியை சிங்கள - தமிழ் தரகுமுதலாளிய வர்க்கங்கள் கூட்டாகவே நிறைவேற்றுகின்றன. (1981 இன் மாவட்ட அபிவிருத்தி சபைகளும், பின்னர் இணைப்பு 'C', பின்பு இந்திய இலங்கை ஒப்பந்தம், 13வது திருத்தச்சட்டம் வரையான சட்டங்களும் இச்சதியை நிறைவேற்றுவதற்கான விடாப்பிடியான முயற்சிகளே!)

ஆ). "தேசிய அவசியம்" என்பது அடிப்படையில் தமிழ்மக்கள் ஒரு தனியான தேசமாக இருப்பதை நிராகரிக்கிறது. இலங்கையை ஒரே தேசமாக அங்கீகரிக்கிறது. "பணிப்புரை வழங்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருத்தல் வேண்டும்" என்பது தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களை அவர்களைச் சிங்களப் பெருந்தேசியவாத ஆளும்கும்பல்களின் அதிகாரத்தின் கீழ் வலுக்கட்டாயமாகக் கட்டிப்போடுவதே அன்றி வேறொன்றுமில்லை.

தமிழ தேசிய ஆவணச சுவடிகள்

www.tamilarangam.net

ஈ) தமிழ்த் தேசியத்தின் பிரதேசத்தையும், சுயநிர்ணய உரிமையையும் சிங்கள தரகுமுதலாளிய வர்க்கத்துக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டதற்குப் பின்னால் "இருதலைவர்களாலும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வரையிலான அதிகாரம்" என்பதற்கு என்ன பொருள்? 'தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் நலனை எந்தளவு கவனித்துக்கொள்ள சிங்களத்தரகுமுதலாளியம் இணங்கியுள்ளது' என்பதைத்தவிர வேறு எதுவாகும் இருக்கமுடியாது.

இவை தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் நலன்களை பேணி நிற்கின்றனவே அன்றி தமிழ் மக்களின் நலன்களை அல்ல. எனினும் சிங்களத்தரகுமுதலாளியவர்க்கங்களுக்குள்ளேயே உள்ள போட்டியால் - இப்போட்டிக்கு எப்போதுமே பேரினவாதம் ஒரு கருவியாகப் பயன்பட்டு வந்திருப்பதினால் - இந்த ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. இதனால் தமிழ் தரகு முதலாளியவர்க்கமும் நஸ்டமடைந்திருக்கலாம். ஆனால் இவை அமுல்படுத்தப்பட்டிருப்பினும் கூட தமிழ்மக்கள் தமது தேசியத் தேவைகளை இவை மூலம் அடைந்திருக்க முடியாது.

தமிழரசுக் கட்சியினரின் போராட்ட வடிவங்களைப் பார்ப்போம். கறுப்புக் கொடி காட்டுதல், உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், அமைதியான ஊர்வலங்கள், பாராளுமன்ற வெளிநடப்பு இந்த வகையான மென்மையான போராட்ட வடிவங்களையே த.அ. கட்சியினர் கையாண்டுவந்தனர். இவை ஆளும் வர்க்கத்துக்கும் அதன் சட்ட ஒழுங்கு ஏற்பாடுகளுக்கும் இடைஞ்சல் விளைவிக்காத, மக்களுக்குப் போர்க்குணத்தை உண்டுபண்ணாத தரகு முதலாளிய வர்க்கத் தேவையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவையாகும். இந்த வடிவங்களைக் கொண்டு சாதாரண நிலைமைகளை சரிக்கட்டிக்கொள்கிற இவர்கள், ஒடுக்குமுறைக்கு எதிராக மக்களின் போராட்ட உணர்வு வளர்ந்துவிடுகிற அசாதாரணமான நிலைமைகளில் மக்களின் இந்த எழுச்சிக்கு வடிகால் அமைக்க கையாளுகின்ற வடிவம் 'சட்ட மறுப்பு இயக்கம்' ஆகும்.

சட்டமறுப்பு இயக்கம் பெரும் விளம்பரத்தைப் பெறும். உணர்ச்சி பீறிட்டுப் பாயும். கட்டம் கட்டமாக போராட்டம் திட்டமிடப்படும். வழக்கம்போல் எப்போதும் முதல் கட்டம் தான் நடக்கும். அடுத்தகட்டம்வரவே வராது. அமைதிபெறாமல் - சரியாகச்சொன்னால் அமைதிபெற்றது மக்களுக்குத் தெரியாமல் - ஊர்வலம் தொடங்கும். பொலிஸ் உத்தரவுகள் ஊர்வலத்தை தடுத்தால் கிழித்த கோட்டைத்தாண்டாது. இப்போது சட்டம் மறுக்கப்படவில்லை, ஏற்கப்படுகிறது. சட்டவிரோதமாக துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்படும். கைதுசெய்யப்பட்டால் 'ட்ரயல்அற்பார்' ( TRIAL AT BAR) இல் வழக்காடும். இவர்களின் சட்டமறுப்பு என்பது சிறிய சட்டத்தை மறுத்து பெரிய சட்டத்தை ஏற்பதாகும். ஒருகட்டத்தில் சட்டத்தை மறுத்து பிறிதொரு சட்டத்தில் சட்டத்திற்குக் கட்டுப்படுவதாகும்.

இதன்மூலம் மக்களின் போராட்ட எழுச்சி அரைக்காலனிய அமைப்பு முறைக்கும், அரசுக்கும், அரசபடைகளுக்கும் எதிராகப் போய்விடாதவாறு பார்த்துக் கொள்கிறார்கள். மறுபுறம் இத்தகைய போலிப் போராட்டங்கள் மூலம் மக்களது எழுச்சிக்கு வடிகால் அமைத்து விடுகிறார்கள். இந்தக் காரியத்துக்கான கூலியை பாராளுமன்றத்தில் நாகரீகமாகப் பெற்றுக்கொள்கிறார்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படி தமிழரசுக்கட்சியினர் தமது தரகுமுதலாளிய வர்க்கநலன் பாதிக்கப்படுகிறபோது - எஸ்.எல்.எவ்.பி ஆட்சிக்காலங்களில் - "தமிழ்மக்களுக்காக போராடுவது போலக் காட்டிக்கொள்வதும், அப்போராட்டக் கோரிக்கைகளிலும் சரி, போராட்ட வடிவங்களிலும் சரி தமது வர்க்க நலனைக்காத்துக்கொள்வதும் வரலாறாக இருந்திருக்கிறது. அதே நேரத்தில் இவர்கள் தமிழ்மக்களின் தலைவர்களாக, தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராடுபவர்களாக கருதப்பட்டார்கள். தமிழ்மக்கள் மீது இவர்கள் தமது ஏகபோக தலைமையை நிறுவியிருந்தனர். இந்த முரண்பாட்டை இப்போது நாம் விளங்கியாக வேண்டும். இது எப்படிச்சாத்தியமாகியது?

எப்போதுமே வரலாற்றுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று ஒடுக்குவோரின் பக்கம். மற்றையது ஒடுக்கப்படுவோரின் பக்கம். ஒடுக்குவோரின் நலன்களும் ஒடுக்கப்படுவோரின் நலன்களும் ஒன்றுக்கொன்று பகைமையானவை. ஏனெனில் ஒன்றை மற்றொன்று வலுக்கட்டாயமாக அடக்குவதன் மூலமே தனது நலனை அடைய நிர்ப்பந்திக்கப்படுகிறது. ஏகாதிபத்திய நாடுகளின் முதலாளிவர்க்கங்களும், தரகுமுதலாளிய நிலவுடமை வர்க்கங்களும் காலனிய அரைக்காலனிய நாடுகளின் ஒடுக்கும் வர்க்கங்கள் ஆவர். தேசிய முதலாளிகள், தொழிலாளிகள், விவசாயிகள் இவர்களால் ஒடுக்கப்படும் வர்க்கங்கள் ஆவர். இவ் ஒடுக்கப்படும் வர்க்கங்களையே நாம் 'மக்கள்' என்கிறோம். ஏகாதிபத்திய, தரகுமுதலாளிய, நிலவுடமை வர்க்கங்களின் கூட்டான '<u>எதிரிகூட்டம்</u>' இம்மக்களை வலுக்கட்டாயமாக அடக்குவதன் மூலம் மட்டுமே தன் நலன்களைப் பெருக்கிக்கொள்ளமுடியும். இதற்கு அவர்கள் அரசியல் அதிகாரத்தை, சட்டங்களை, கூலிப்படைகளை, "சட்டபூர்வமப்பாக்கிகளை" பயன்படுத்துகிறது. இவ்வாறு ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்கும் இடையிலான வர்க்கப்போராட்டமே இந்நாள் வரையான மனிதகுலத்தின் ஏடறிந்த வரலாறு அனைத்தையும் உந்தித்தள்ளிய சக்தியாக இருந்து வந்துள்ளது.

ஒடுக்கும் வர்க்கங்களின் நலன் பரந்துபட்ட பெரும்பான்மையான வர்க்கங்களின் நலனுக்கு நேர் விரோதமானது. இதனால் ஒன்று; அவர்கள் தமது சொந்தவர்க்க நலனை பகிரங்கப்படுத்த முடியாது. இரண்டு; தமது சொந்தவர்க்கத்தின் பலத்தில் மட்டும் தங்கியிருந்து தமது நலன்களை அடைய முடியாது. மூன்று; ஒடுக்கப்படும் வர்க்கங்கள் இருக்கவும் வேண்டும் ஆனால் அவை ஒடுக்குமுறையை எதிர்க்கவும் கூடாது. இது ஒரு முரண்பாடாகும். இம்முரண்பாட்டுக்கு ஏதோ ஒரு வழியில் தீர்வுகாணாமல் ஒடுக்கும் வர்க்கங்கள் தமது நலனைக்காத்துக்கொள்ள முடியாது. ஒடுக்கும் வர்க்கங்களின் இப்பொதுவான அவசியம், ஒடுக்கப்படும் சமூக வர்க்கங்களை பொய்யான வழிகளில் ஏமாற்றி தம்பின்னே திரட்டிக் கொள்ளவைக்கிறது. ஒருபுறம் இவ்வாறும் மறுபுறம் சட்டபூர்வ வன்முறைமூலம் இம்முரண்பாட்டுக்கு (தற்காலிக) தீர்வு காண முயல்கின்றனர்.

இன்னொன்றும் நடக்கிறது. அது ஒடுக்கும் வர்க்கங்களுக்குள்ளேயே உள்ள போட்டியின் விளைவானதாகும். இப்போட்டியின் காரணமாகவும் இவை தம்முள் போராடவேண்டியுள்ளது. இப்போராட்டத்துக்கான பின்பலத்தையும் இவர்கள் ஒடுக்கப்படும் சமூகவர்க்கங்களிடமிருந்தே பெற்றுக்கொண்டாக வேண்டும். இங்கேயும் ஒரு முரண்பாடு உள்ளது. ஒடுக்கும் ஒரு சமூக வர்க்கப்பிரிவே தன்னால் ஒடுக்கப்படும் சமூகவர்க்கங்களைத், தன்பின்னால் திரட்டிக்கொள்வது அதிசயமாகத்தெரியும். ஆனால் வரலாற்றில் இதுவும் சாத்தியமாகவே செய்கிறது....ஆனால் முற்றிலும் தற்காலிகமாக! இது எவ்வாறு சாத்தியமாகிறது?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுதாயத்தின் வளர்ச்சி என்பது, அச்சமுதாயம் தானே உற்பத்தி செய்துகொண்ட உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியினால் தீர்மானிக்கப்படுகிறது. அதன் ஒரு எதிரான பரிணாம வளர்ச்சிப்போக்காக இருப்பதில்லை. மார்க்சின் கூற்றுப்படி;

"வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்தி சக்திகள் இன்றிருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு - அல்லது அவற்றைச்சட்ட பூர்வமான சொற்களில் வெளிப்படுத்துகிற சொத்துரிமை உறவுகளோடு - அதாவது அவை இயங்கிவந்திருக்கிற சுற்றுவட்டத்துக்குள்ளேயே மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதில் இருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறிவிடுகின்றன. அப்போது சமூக புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றம் அந்த மாபெரும் மேற்கட்டிடம் முழுவதையுமே விரைந்தோ அல்லது சற்று காமதமாகவோ மாற்றியமைக்கின்றன."

ஆனால் பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றம் - முதலாளியத்துக்கு முந்திய உற்பத்திமுறையில் இருந்து சுதந்திர முதலாளித்துவ வளர்ச்சியை நோக்கியமாறுதல் அப்படியே கண்ணாடியில் தெரிகிற விம்பத்தைப் போல் மேற்கட்டுமானத்தில் - அரசியலில் தேசிய விடுதலைப்போராட்டத்தில் - அச்சொட்டாகப் பிரதிபலிப்பதில்லை. மேலும் மார்க்ஸ் கூறுகிறார்.

"இப்படிப்பட்ட மாற்றங்களை ஆராய்கிறபோது உற்பத்தியின் பொருளாதாரநிலைமைகளில் ஏற்படுகிற பொருள்வகை மாற்றங்களையும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல் துல்லியமாக நிர்ணயிக்க முடியும்.) சட்டம், அரசியல், மதம், கலைத்துறை அல்லது தத்துவஞானத்துறைகளில் - சுருக்கமாகச் சொல்வதென்றால் சித்தாந்தத்துறைகளில் - இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக்காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறுபாட்டைக் காண்பது எப்பொழுதுமே அவசியமாகும்."

(மார்க்ஸ் 'அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒருகருத்துரை' -முன்னுரையில்)

இங்கே பழைய உற்பத்தி முறையின் மேற்கட்டுமானங்களுக்கான சித்தாந்த அரசியல் கருத்துக்களும் தம்மை நிலைநிறுத்தப்போராடும். இவை மாறுதலை வேண்டிநிற்கும் சமுதாய இயக்கத்தின் மீது தமது செல்வாக்கைச் செலுத்திநிற்கும். இது மக்களின் சிந்தனையில் பலமாகப் பதிந்தும் இருக்க முடியும். இந்த நிலைமை உள்ள வரையில் பழைய உற்பத்தி உறவுகளை பாதுகாத்து நிற்கிற பிற்போக்கான சமூகவர்க்கங்களும் - தமிழ்த்தரகுமுதலாளியவர்க்கம் - தமது அரசியல் தலைமையை மக்கள்மீது நிறுவ முடிகிறது. எனவே தமிழ்த் தரகுமுதலாளியத்தின் 'சமரசசக்தி' பாத்திரத்துக்கான அடிப்படை ஆகும். தமிழ்மக்களின் தேசியத்துக்கு முந்திய பின்தங்கிய சாதிய, பெண்ணடிமை, மதஉறவுகளுக்கு கொள்கை வடிவம் கொடுத்து, மக்களின் வாழ்நிலையையும் அதன் தேவையாக தேசியம் இருப்பதையும் காணவிடாது தடுத்ததன்மூலம் தனது தலைமையை நிறுவிக்கொண்டது. இவ்வாறுதான் தமிழ்த்தரகு முதலாளியவர்க்கத்தின் எழுச்சி சாத்தியமாகியது.

எனினும் இத்தலைமையானது சமுதாய வளர்ச்சிப்போக்கில் கழித்துக்கட்டப்பட்டு விடுகிற பின்தங்கிய உற்பத்தி உறவுகள் மீது ஆதாரப்பட்டு நிற்பதனால் அதன் வீழ்ச்சி சர்வநிச்சயமானது. ஆனால் அதுதானாகவே வீழ்ந்துவிடாது. அது வீழ்த்தப்படவேண்டும். பொருளாதார அடித்தளம் வேண்டிநிற்கும் முதலாளித்துவப் பொருளாதார மாறுதல் அவசியமாக்கும் வர்க்கங்கள் - தேசிய முதலாளித்துவ வர்க்கம் ( [illegible] ),

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளவர்க்கம், விவசாயிகள்- தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் பிரதிநிதித்துவம் செய்யும் பின்தங்கிய உற்பத்தி உறவுகளின் எதிர்புரட்சித்தன்மையை அம்பலப்படுத்தி அதன் சித்தாந்த அரசியல் செல்வாக்கிலிருந்து மக்களை மீட்டெடுத்து தேசியப்புரட்சியை முன்னெடுப்பதன் மூலமே இவ்வர்க்கத்தை வீழ்த்த முடியும், அல்லாத வரையில் - புதிய பொருளாதார உறவுகளுக்கும் அமைப்படையில் வளர்ந்து செல்லும் சமுதாய இயக்கத்துக்கும் ஈடுகொடுக்க முடியாமல் இவ்வர்க்கம் தன்னைத்தானே எவ்வளவு அம்பலப்படுத்திக்கொண்டாலும் கூட - ஒருவர்க்கம் என்ற முறையில் அதன் எதிர்ப்புரட்சிச் செல்வாக்கு நீடிக்கவேசெய்யும்.

ஏனெனில் எவ்வளவுதான் தமிழ்த்தரகுமுதலாளியத்தின் சித்தாந்த அரசியல் செல்வாக்கு, தேசிய விடுதலையை வேண்டிநிற்கும் சமுதாய இயக்கத்தின் மீது அதிக்கம் செலுத்துகிறபோதும் இறுதியாக பொருளாதார உறவுகளே தீர்மானிக்கும் காரணிகளாம். புரிதலுக்கு இட்டுச் செல்பவையாய் அமைகின்றன. முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறையில் இருந்து முதலாளித்துவ சமூக வளர்ச்சிப் போக்கை வேண்டி நிற்கும் பொருளியல் முரண்பாடு மேற்கட்டுமானத்தில் தேசியவிடுதலைப் போராட்டமாக விடாப்பிடியாக வளர்ந்து வந்தபோது அதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தமிழ்த்தரகுமுதலாளியம் தன்னைத்தானே அம்பலப்படுத்திக்கொண்டது. அதன் பிற்போக்கு பாத்திரம் அரைகுறையான வடிவில் வெளித் தெரியத்தொடங்குகிறது. இந்நிலையில் தமிழ்த்தரகு முதலாளியத்தின் வீழ்ச்சியும் அமைகின்றது நமதுபணி இந்தச் சிழுட்டுக்கட்டையின் ஈமக்கிரியை முடித்துவைப்பதாகும். இது தமிழ்த்தரகுமுதலாளியத்தின் எதிர்ப்புரட்சிப்பாத்திரத்தை அம்பலப்படுத்துதல், தேசியப்புரட்சியை விடாப்பிடியாக முன்னெடுத்தல் ஆகிய இரு முனைகளில் சாதிக்கப்படவேண்டும்.

## 3. விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சியும் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் வீழ்ச்சியும். (1970 -1977).

தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் தமிழ் மக்களின் தேசிய விடுதலையை அரைக்காலனிய அமைப்பு முறைக்குக் கட்டிப்போட்டு சீரழிக்க தன்னாலானவரையும் முயன்றபோதும் அந்த முயற்சிகள் அனைத்தையும் மீறிக்கொண்டு தேசியவிடுதலைப்போராட்டம் வெளிக்கிளம்பியது. ஏன்? எவ்வாறு?

கொண்ட ஏகாதிபத்திய சுரண்டல் முதலாளித்துவத்
அரைக்காலனிய அமைப்பு முறையை தனது பிரதான உற்பத்திமூலமாக/ தொழிற்றுறை வளர்ச்சியை தடுத்துவிட்டது. அதிகார கைமாற்றத்தின் பின்னால் தரகுமுதலாளிய கும்பல்கள் ஏகாதிபத்திய நிதி நிறுவனமான உலகவங்கியின் "பாரியமுதல் தேவைப்படும் கைத்தொழில் முயற்சிகளுக்குப் பதிலாக, சிறுகைத்தொழில்களிலேயே இலங்கை கவனஞ் செலுத்த வேண்டும்" என்ற கட்டளையை (1951) ஏற்றுக்கொண்டு நாட்டின் சமூக. பொருளாதார வளர்ச்சியை முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறையிலேயே தக்க வைத்துக்கொண்டன. இதன் விளைவாக நாட்டின் 78% ஆன சனத்தொகை விவசாயத் துறையிலேயே தங்கியிருக்கச் செய்யப்பட்டது. இந்த விவசாயத்துறையும் மரபுரீதியான பின்தங்கிய தன்மைகளைக் கொண்டதாகவும், சிற்றுடமை விவசாயமாகவும் உள்ளது. இச் சிறு உடமை விவசாயம் பெருகிவரும் சமுதாயத்தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியாததாக இருக்கிறது. இதனால் விவசாயத்துறையினால் ஏற்கக்கூடிய அளவுக்கு மிஞ்சிய ஒரு உபரிச்சனத்தொகை அத்துறையிலிருந்து வெளியே தூக்கி வீசப்படுகின்றது. இச்சனத் தொகையில் பதிவுசெய்யப்பட்ட பகுதியினர் மட்டும் (அரசாங்கத்தகவல்களின் படி)1963 ல் 4 இலட்சம் ஆகவும், 1970 ல் 7 இலட்சத்து 92ஆயிரமாகவும் இருந்தது. இந்த

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உபரிச்சனத்தொகையை உள்வாங்க எந்த உற்பத்தித்துறையும் இல்லை. இதுவே தனிநபர் மட்டத்தில் வேலையில்லாப் பிரச்சனையாக உருப்படுகிறது. உண்மையில் முதலாளித்துவத் தொழிற்துறை வளர்ச்சி மட்டுமே இவ் உபரிச்சனத்தொகையை உள்வாங்கி உற்பத்தி சக்திகளை மென்மேலும் வளர்த்து, உற்பத்தியைப்பெருக்கி சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க முடியும். அது இல்லாதபோது சமுதாயம் தன் தேவைகளை நிறைவுசெய்ய கொந்தளிக்கும்... போராடும்.. இந்தப்புரட்சிகளும் அவற்றை முன்னெடுக்கும் வர்க்கங்களுமே உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்துக்கும் வழிகோலுகின்றன.

உற்பத்தி முறையின் பின்தங்கிய நிலைமைக்கும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் இடையிலான முரண்பாடு 1971 ஏப்ரலில் சிங்களக் குட்டி பூர்சுவா வர்க்கத்தின் ஆயுதக்கிளர்ச்சியாக வெடித்தது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத்தடுக்கிற ஏகாதிபத்தியங்களின் காவல் நாயும், பிற்போக்கு வர்க்கமும் ஆகிய சிங்களத் தரகுமுதலாளி வர்க்கம், இந்தியத்தரகுப்பெரு முதலாளிய வர்க்கத்தின் துணையோடு இக்கிளர்ச்சியை ஒடுக்கி ஏகாதிபத்தியத்திற்கு சேவகம் செய்தது. அத்துடன் நீடித்திருக்கும் இம்முரண்பாடு தனக்கெதிராக மீண்டும் வெடித்துவிடுவதைத்தடுக்க சிங்கள மக்களை தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பியது.

விவசாயத்திலிருந்து பிரிந்த உபரிச்சனத் தொகையை மீளவும் விவசாயக்காணிகளிலேயே குடியமர்த்தும் முயற்சி தமிழ் விவசாயிகளிடமிருந்து காணிகளை அபகரிக்கும் 'திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாக' வெளிப்பட்டது. (அட்டவணை 2).

அட்டவணை (2) சிங்களக் குடியேற்றம்.

| மாவட்டம் | ஆண்டு | தமிழர்% | சிங்களவர்% |
|---|---|---|---|
| திரிகோணமலை | 1971 | 38.1% | 29.1% |
| | 1981 | 36.4% | 33.6% |
| அம்பாறை | 1971 | 22.8% | 30.2% |
| | 1981 | 19.9% | 37.6% |
| மன்னார் | 1971 | 68.1% | 4.1% |
| | 1981 | 63.8% | 8.1% |

அரசாங்கநிர்வாகம் மற்றும் சேவைத்துறைகளில் தமிழ்மக்களின் வேலைவாய்ப்பைப்பறித்து சிங்கள மக்களுக்கு அளித்தது. கல்வியில் தரப்படுத்தல் முறைகளைப் புகுத்தி தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்பைப் பறித்து சிங்கள மாணவர்களுக்கு அளித்தது. (அட்டவணை 3). மேலும் 1970 -77 ஆண்டுகளில் தமிழ் மாணவர்களின் மருத்துவத்துறை அனுமதி 64% ஆலும், பொறியியல் துறை அனுமதி 44% ஆலும் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை (3) - பல்கலைக்கழக அனுமதி 1970-1974

| | 1970-71 | | 1971-72 | | 1973 | | 1974 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | விஞ் | கலை | விஞ் | கலை | விஞ் | கலை | விஞ் | கலை |
| சிங்களவர் (%) | 60.6 | 89.9 | 63.2 | 92.6 | 67.4 | 91.5 | 75.4 | 86 |
| தமிழர் (%) | 35.3 | 7.6 | 33.6 | 4.8 | 29.5 | 6.1 | 20.9 | 10 |

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அடிப்படையில் பார்த்தால் 'விவசாயத்திலிருந்து வேறுபிரிந்த உபரிச்சனத்தொகைக்கு' வடிகால் சமைக்க தமிழ்மக்களுக்கிருந்த உற்பவாய்ப்புக்களையும் (அட்டவணை-1) பறிக்கும் கொள்கை தீவிரமாக்கப்படுகிறது. இது சிங்கள மக்களின் மீதான பாசத்தால் உந்தப்பட்டுச் செய்யப்பட்டதல்ல. அப்படியானால், ஏகாதிபத்தியச்சுரண்டலை ஒழித்து தேசியத்தொழிற்றுறையைப் பெருக்குவதன் மூலம் இப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டிருக்க முடியும். ஆனால் சிங்களத் தரகுமுதலாளிய வர்க்கம் கண்ட தீர்வு, அந்நிய நிதி மூலதன இறக்குமதியைத் தொடர்ந்தபடியே, அதன் மூலம் தமது தரகுமுதலாளிய நலன்களை அடைந்தபடியே, அதன் விளைவாக எழும் பொருளாதார, அரசியல் சமுதாயப் பிரச்சனைக்கு சிங்கள - தமிழ் சமுதாயங்களை மோதவிடுகின்ற கேடுகெட்ட வழிமுறையாகும். இது நிலவுடமை வர்க்கங்களினதும், தரகுமுதலாளிய வர்க்கங்களினதும், அந்நிய நிதிமூலதனத்தினதும் நலன்களுக்கு சேவை செய்கிற வழிமுறையாகும்.

ஆனால் இவர்களின் சகபாடியான தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கமோ அரசினதும், சிங்கள இனதும் நம்பல்களாம் ' அந்நிய நிதிமூலதனத்திற்கு சேவகம் செய்யும் தரகு முதலாளிய வர்க்க இயல்பை மூடிமறைத்த தமிழ்மக்களை ' சிங்கள ' எதிர்ப்புணர்விலும், இனவாத உணர்விலும் வளர்த்தது. ஆக நாடு அடிப்படைப் பிரச்சனையில் இருந்து இருதேசிய இனங்களின் தரகுமுதலாளிய வர்க்கங்களும் இனவாதத்தின் துணைகொண்டு மக்களை தேசியப்புரட்சிப் பாதையில் இருந்து திசைதிருப்பி தமது வர்க்க நலனைப் பாதுகாக்கவே முயன்றனர்.

இதனும் மேலே கட்டவான அரைக்காலனிய அமைப்பு முறைக்குள் இருந்த அற்பமான உற்பத்தி வாய்ப்புகளையும் சிங்களப் பேரினவாதம் பறிக்கெடுத்துக் கொண்டதானது தமிழ்மக்களின் பிரச்சனையை புதிய பரிமாணம் எடுக்க வைத்தது. '70களின் பின்னால் தமிழ்த்தேசியப்பிரச்சனையின் தீவிரப் போக்குக்கான அடிப்படைகளாக 'உற்பத்தி வாய்ப்பற்ற உபரிச்சனத்தொகையின் பிரச்சனையும்', அதன் மீதான சிங்களப் பேரினவாதத்தின் வெளிப்பாடுகளும் அமைந்தன. இந்நிலைமையானது தமிழ்த்தரகு முதலாளியத்தின் சமரச வாதத்தையும், பாராளுமன்ற சட்டவாதத்தையும் நிராகரித்து அரைக்காலனிய அமைப்புமுறைக்கு எதிரானதாக தமிழ்த் தேசியப்பிரச்சனையை வெளிக்கொணர்ந்தது. அதுவே 'தனிநாட்டுக் கோரிக்கை' இது தமிழ் முதலாளிவர்க்கத்தின் சமஸ்டி கோரிக்கையைப் போல் அந்நியக்குரலாக இப்போது இல்லை. தமிழ்ச் சமுதாயத்தின் சொந்தக் குரலாக வெளிவருகின்றது.

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் ஏற்பட்ட இந்தத்திருப்பத்தின் பலம், பலவீனம் பற்றிய பருப்பாய்வு மிக இன்றியமையாதது. ஏனெனில் இவையே 80களுக்குப் பின்னால் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான அடிப்படைகளாக விளங்குகின்றன. இத்திருப்பத்தின் கவனத்துக்குரிய அம்சங்கள் பின்வருமாறு;

அ) இத்திருப்பம் புறநிலையில் இதுவரையான தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் கோரிக்கையைப் போலல்லாது, உள்ளடக்கத்தில் அரைக்காலனிய அமைப்புமுறைக்கும், அதனடிப்படையின் மீது கட்டியமைக்கப்பட்ட பாசிச அரசுமுறைக்கும், ஏகாதிபத்தியச்சுரண்டலுக்கும் எதிரானதாக அமைகின்றது.

ஆ) ஆனால் அகநிலையில் இது இருபிரதான பலவீனங்களைக்கொண்டிருந்தது. ஒன்று, இக்கோரிக்கை தமிழ்ச்சமுதாயத்தின் ஆதாரப்பட்டுநிற்கிற சமூகவர்க்கம் குட்டிமுதலாளிவர்க்கமாக இருந்தது, இக்கோரிக்கையையும், அதற்கான போராட்டங்களும் தன்னியல்பானவையாகும். உணர்வுபூர்வமானவை அல்ல!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் விளைவு என்னவெனில் குட்டிபூர்சுவா வர்க்கத்தின் சிந்தனை வரம்புகளைத் தாண்டி 'தனிநாட்டுக்கோரிக்கை' தனது உள்ளடக்கத்தை பெற்றுக்கொள்ளவில்லை. பிரதானமாக தனிநாட்டுக் கோரிக்கையின் உயிர். ஏகாதிபத்திய எதிர்ப்பில் அடங்கியிருப்பது உணர்ந்து கொள்ளப்படவில்லை. "சிங்கள அரசிடம்" இருந்து தமிழ்மக்கள் விடுதலை பெறுவதாக குறுக்கிப்புரிந்துகொள்ளப்படுகிறது. இது மறுபக்கத்தில் தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்துக்கு ஒரு இனவாத உருவத்தைக் கொடுத்து விடுகிறது. இதனால் தனி நாட்டுக்கோரிக்கை தமிழ்தரகுமுதலாளிய வர்க்கத்துடன் தன்னைக் கொள்கை ரீதியில் முறித்துக்கொள்ளவில்லை. தமிழ்த்தரகுமுதலாளிய அரசியல் கைவிடப்படாமலேயே தனிநாட்டுக்கோரிக்கை கையில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. குட்டிபூர்சுவா வர்க்கத்தின் வர்க்கப் பார்வையின்மையும், ஏகாதிபத்திய எதிர்ப்பற்ற தன்மையும் காரணமாக தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தை தவறாக எடைபோட்டுக் கொள்கிறது. அதிகபட்சம் அதனை விமர்சனம், 'இதயசுத்தி', 'தனிநபர்நேர்மை', 'பதவிவெறி', 'பிழைப்புவாதம்' என்பதாகவே இருக்கிறது. இவற்றுக்குப்பின்னால் (தமிழ்த்தரகுமுதலாளிய) வர்க்கம் இருப்பதையும், அதன்நலன்கள் தேசியப்புரட்சிக்கு எதிரானது இருப்பதையும் குட்டிபூர்சுவா வர்க்கம் புரிந்து கொள்ளவில்லை. அது தமிழ்த்தரகுமுதலாளியத்திடம் கண்ட குறைபாடுகளை நீக்கி தான் நேர்மையாகவும், ஐக்கியத்துடன் செயற்படுவதின் மூலம் விடுதலையை அடைந்துவிடலாம். எனஎண்ணுகிறது. போதாக்குறைக்கு குட்டிபூர்சுவா வர்க்கத்தின் எல்லாக் கற்பனாவாதங்களும் போராட்ட இயக்கத்தில் தொற்றவைக்கப்படுகிறது. "சோசலிசத்தமிழீழம்" அத்தகைய ஒரு கற்பனாவாதமே! இத்தனை பலவீனங்களோடும் தான் குட்டிபூர்சுவா வர்க்கம் தமிழ்தரகுமுதலாளிய வர்க்கத்துடன் மோதுகிறது.

70களின் பின்னால் தமிழர்கூட்டணியினரோடு சம்பந்தங் கொள்ளாத சுயாதீனமான குட்டிபூர்சுவா மாணவர் இளைஞர் ஸ்தாபனங்கள் தோன்றின. தமிழ் இளைஞர் பேரவை உடைந்தது. ஈழவிடுதலை இயக்கம் தோன்றியது. 'எரிமலை' (பத்திரிகை) வெளிவந்தது. போட்டிக்கு 'குமுறல்' (தமிழ்தரகுமுதலாளிய ஆதரவு பத்திரிகை) வந்தது. மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் மத்தியில் தனிநாட்டுப்பிரச்சார இயக்கம் முனைப்போடு கொண்டு செல்லப்பட்டது. தேர்தல் பாதை நிராகரிக்கப்பட்டது. தமிழர் கூட்டணியினர் "குற்றவாளிக்கூண்டில்" நிறுத்தப்பட்டனர். இந்த எதிர்ப்புக்கள் தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கத்தின் 'செயலற்ற கையாலாகாத்தனத்தின்' மீதான குட்டிபூர்சுவாவர்க்கத்தின் வெறுப்பின் வெளிப்பாடுகளாக இருந்தன. அதேவேளை தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி அரசியலின் மீதான தாக்குதலாக அமையவில்லை. இந்த எதிர்ப்புக்களின் தன்னியல்புதான் அடிப்படை. தேசிய விடுதலைக்கான திட்டம் அடிப்படையல்ல.

இவ்விளைவாக, தேசியப்புரட்சியின் நடுவே புகுந்து அதனைத்திசை திருப்பி சீரழிக்கப்பாடுபடும் சமரசசக்தியாக தமிழ்த்தரகு முதலாளியவர்க்கத்தை இனங்காணவில்லை. இவர்களை அரசியல் ரீதியில் அம்பலப்படுத்தி மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தும் கொள்கை இருக்கவில்லை. சமரசசக்திகளை தனிமைப்படுத்தும் கோட்பாட்டுத்தீர்வின் அடிப்படையில் அமையாத தன்னியல்பான எதிர்ப்புக்களாக '70களின் எதிர்ப்புக்கள் அமைந்தன. இத்தன்னியல்பே திம்புபேச்சுவார்த்தையிலும் அதன்பின்பும், தமிழர் கூட்டணியினருடன் 'ஐக்கிய முன்னணி' அமைக்கவும், பின்னர் "முதலாளித்துவ ஜனநாயகம்" பற்றிப் பேசுவதற்கும் காரணமாயிற்று.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப்பலவீனங்கள் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கம் 'குளிர்காய்வதற்கு' இடம் விட்டுக் கொடுத்தது. குட்டிபூர்சுவாவர்க்கத்தின் தனிநாட்டுக் கோரிக்கையும் தமிழ்த்தரகுமுதலாளியவர்க்கத்துக்கு 'கருவேப்பிலை' ஆனது. முதல்கட்டத்தில் இளைஞர்களது நம்பிக்கையைப்பெறவும், அதேநேரத்தில் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவும் முயல்கின்றனர். "தமிழினத்தின் ஒற்றுமையைக் கெடுக்க வேண்டாம்" என்ற எச்சரிக்கை. "தம்பிமார் படிக்கவேண்டும்" என்ற ஆலோசனை. "மார்க்சியத்தில் மனந்தோய்ந்தவன்" என்கிற ஏமாற்று. "நிதானம் இழந்தால் இனத்துக்கு அழிவு" என்கிற புத்திமதி. "நான் இளைஞனாக இருந்த காலத்தில்...." என்கிற வரலாற்றுப் போதனை. திருவாளர் அமிர்தலிங்கம் அவர்கள் "அமிர் அண்ணை" ஆனதல்... இந்த மோசடிகள் எதுவும் பலிக்காமல் போகிறது. தமிழ்த்தரகுமுதலாளியம் நாளை அம்பலமாகிறது. இந்நிலைமையில் குட்டிபூர்சுவா எழுச்சியை வசப்படுத்த தனிநாட்டுக்கோரிக்கையை தாமே எடுத்துக்கொள்கின்றனர்.

1970 - 76வரை ஆட்சியில் இருந்த சிங்களத் தொழிற்றுறைத் தரகுமுதலாளிய வர்க்கத்திற்கெதிராக வணிகத்தரகர்கள் ஒன்று சேர்ந்து கொண்டனர். தொண்டமான், ஜே.ஆர்.உடன் கூட்டுச்சேர்ந்து மலையகத்திலும் தென்னிலங்கையிலும் போராட்டம் நடத்தி வந்தார். (1977இல் அவருக்குப் பதவி கிடைக்க இருந்தது!) மறுபுறம் தமிழ்வணிகத் தரகர்களுடனும் கூட்டுக்குப்போனார். இந்த வணிகத்தரகர்களின் கூட்டை 'தமிழர் கூட்டணி' (1974) எனப்பெயரிட்டு அழைத்தனர். (அக்காலத்தில் இளைஞர்கள் மத்தியில் 'விடுதலை'பற்றிய கருத்து வளர்ந்து வந்ததால் பின்னர் அது தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியது!) 1976இல் வட்டுக்கோட்டையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். 1977இல் பொதுத்தேர்தல் திட்டமிட்டபடி வரவிருக்கிறது. "இந்தமுறைதேர்தல் தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு" என்றுகிறது. தேர்தல் விஞ்ஞாபனம் சொல்வதாவது;

> "எதிர்வரும் பொதுத்தேர்தலில் இந்நாட்டின் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் (?) உள்ளடக்கியதான சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற சமதர்ம தமிழீழ அரசை நிறுவுவதற்கு தமிழ்த்தேசிய இனத்தின் கட்டளையைத் தமிழர் கூட்டணி நாடி நிற்கிறது."

குட்டிபூர்சுவா வர்க்கம் முன்னெடுத்துச் சென்ற தீவிரப் பிரச்சாரத்தை தமிழ்த்தரகு முதலாளிய வர்க்கம் அறுவடை செய்தது. என்றுமில்லாத பெரும்பான்மை வெற்றியடைந்தனர். ஆனல் தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் வழக்கமான 'கருவேப்பிலை' விளையாட்டில் இந்த முறை வித்தியாசமானது. தமிழீழக்கோரிக்கை சமஸ்டிக்கோரிக்கையல்ல. அது பொருளாதார அடித்தளத்தில் வேர்கொண்டு, முழுச்சமுதாயத்தினதும் ஜீவாதார நலன்களை உள்ளடக்கி நின்ற மக்களின் கோரிக்கை ஆகும். வாக்குரிமை பறிக்கப்பட்ட போது இருந்த தீர்க்கதரிசனம், வட்டுக்கோட்டைத்தீர்மானத்தின் போது இல்லாது போய்விட்டது!

'81இல் மாவட்ட அபிவிருத்தி சபைகளுடன் வருகிறார்கள்; யாழ்பல்கலைக்கழக வளவில் உதய சூரியன் ("தமிழீழத்தின் தேசியக்கொடி!") கொடிபோர்த்திய அமிர்தலிங்கத்தின் கொடும்பாவி சுடர்விட்டு எரிகிறது. 1987இல் இந்திய -இலங்கை ஒப்பந்தத்துடன் வருகிறார்கள்; பொதுத்தேர்தலில் தமிழ்தரகு முதலாளியம் மண்கவ்வுகிறது. 1989 ஜூலையில் இந்திய ஆக்கிரமிப்புப்படைகளை 'வெளியேற வேண்டாம் தமக்குப் பாதுகாப்பில்லை' என்றார்கள்; அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் சுட்டுத்தள்ளப்பட்டார்கள். இவை தமிழ்த்தரகுமுதலாளிய வர்க்கத்தின் வீழ்ச்சியைக் காட்டுகின்றன என்பது

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்